[illegible]

V 4 No. 2 28 May 1931

ത211, N28K N
N31·4·21
188919

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ மே ௴ 28௳ [No. 21.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 401
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 403
3. நவராத்திரி — ஓர் நாடகம்
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 404
4. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 84—98)
K. இராமரத்நம் ஐயர் B A. 407
5. மானதசாத்திரம் (புலன்கள் - காலவுணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L 409
6. யாப்பிலக்கணம் (தொடை - முரண்) 411
7. விளக்குமாறு - விளக்குமாறு (Jonathan Swift)
K. இராஜகோபாலன் 414
8. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 415
9. வர்த்தமானம் 419

கலாநிலயம்

188919

மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 2.

உணவு உடை வீடு ஆதிய வசதிகளுடன் சிற்சில சவுகரியங்களை அடையவேண்டும் என்னும் உரிமை ஒவ்வொருவருக்கும் உளது என்றவோர் கருத்து இக்காலம் எங்கெங்கும் பரவிவரக் காண்கின்றோம். உயிரோடிருக்கும் உரிமை எல்லோர்க்கும் உண்டென்பார் பொதுஜனவாழ்க்கை அரசியல் முதலிய இயக்கங்களில் முற்பட்டு நிற்போர் பலர். வர்த்தமானப்பத்திரிகைகள் இவையனைய வாசகங்களை வரம்பின்றி வழங்கிவிடுகின்றன. அதன்மேல் இச்சொற்றடரின் ஆரவாரம் நாளுக்குநாள் அதிகமாகிக் கண்டவர்கேட்டவர்கள் எல்லோரும் அதனிலடங்கிய கருத்தின் தத்துவமனைத்தையும் தெளிந்துகொண்டவர்போல் விவகரிக்கத் தலைப்படுவது வருந்தத்தக்கதேனும் வியக்கத்தக்கதன்று. ஏனெனில் யாதாவதொன்றிற்கு அடிமையாய்க் கிடக்கவேண்டுமென்பதே பொதுஜனமனத்தின் குணம். பெரும்பான்மை இக்காலம் உயர்ந்தவைகளை உதறிவிட்டுத் தாழ்ந்ததற்குத் தலைவணங்குவதே இன்றைய செய்தியாய் எத்துறையிலும் தோன்றுகின்றது. நாணம் நிறை முதலிய கட்டுப்பாடுகளுக்கு அடங்கினின்று கெட்டோம், என்று துவக்கிய ஷாமல்ஹூஸேன் அனைய மேனாட்டு நூலாசிரியர்களில் பலர் காமத்திற்கு அடிமையாகும்படி அழைக்கின்ற இழிவை, இதன்முன் சில தலையங்கங்களில் விளக்கியிருக்கின்றோம். இப்படியே, வேதங்களை விற்று வர்த்தமானப் பத்திரிகைகளை வாங்குவதும் பொதுஜனப் பான்மையின் ஒரு பாகமே யாகும்.. உள்ளபடி நினைத்தோ நினையாமலோ உரிமையென்னுங் கொடியொன்றை உயர்த்திவைத்து அக்கொடியினைக் காப்பதற்குத் தாம்தாம் இருப்பதாகப் பாவிக்கவேண்டியது வர்த்தமானப்பத்திரிகைகளின் தொழில். இந்தப் பார்வையில் படுகின்ற பாமரசனங்கள் அப்பத்திரிகைகளை வாசிக்குமளவில் தம்முடைய உரிமையை எய்துவதுமன்றி மற்றவர் உரிமையைக் காக்கின்றவோர் கருமத்தையும் தாம் பூண்டிருப்பதாக மிக எளிதில் மிக விரைவில் மதித்துக்கொள்கின்றவர்களாய் முடிகின்றனர். பொய்யை மெய்யென மயங்குகின்ற பாவங்களில் ஒன்று இது. இதனால் விளைவது தீதொழிய நன்மையில்லை.

உரிமை என்பதெல்லாம் பொய்யாகுந் தன்மையை, முன்னாண்டுகளில் வந்துள சில தலையங்கங்களில் விளக்கியிருக்கின்றோமாதலின் மீண்டு மதனை இங்கு விரித்துரைக்க விரும்பவில்லை. ஆயினும் உரிமையென்னு மிக்கொள்கை பண்டைய இந்திய நாகரிகம் அறியாத தொன்றெனு அங்கு யாம் உரைத்ததை மீண்டு மிங்குமோர்முறை விளம்பி வற்புறுத்துதல் மிகையாகாது. பண்டைய இந்தியர் பெருமையையைத் தம் பற்றுக்கோடாக வாயால் வழங்குகின்றவர் அப்பெருமை, இவ்வுரிமை என்பதொன்றில்லாமையிலேயே அடங்கியிருந்த தென்பதை ஐயமறத் தெளிந்துகொள்ளல் சாலவும் நன்மையாம். யாமறிந்தவரையில் புராண இதிசாசங்களிலேனும் தர்மசாஸ்திரங்களிலேனும் இன்னார்க்கு இன்ன உரிமை உளதென எங்கும் வரையறுக்கப்பட்டிருப்பதாக ஒன்றுந் தெரியவில்லை. இது இது இவரிவர் தர்மம் என்று செப்புங்கால் கடமைகளே சாதிக்கப்படுகின்றனவன்றி அக்கடமை செலுத்தப்பெறுவதற் கிலக்காகியவர்பால் எவ்வுரிமையும் இயம்பப்படுகின்றதென்று எண்ணலாகாது. எல்லாவிதங்களிலும் மற்றவர்பால் நாம் நீதிவழுவாமல் நடக்கவேண்டும் என்ற கடமை நமக்குண்டு என்பதே அக்கால வாழ்க்கையின் ஆணிவேராய கொள்கை. இதற்கெதிர் மற்றவர் அந் நீதியைச் செலுத்தவேண்டுமென்று எதிர்பார்க்கின்ற எண்ணமும் நமக்கு இருக்கலாகாதெனின் அவ்வுரிமை உண்டென்று உரைப்பதற்கும் இடமேது. 'வேலைக்கேற்ற கூலி பெறவேண்டும்' என்னும் உரிமை யாவர்க்கும் உளதென்பர் இக்காலத்து உரிமைவாதிகள். மெய்யுணர்வுடைய அக்காலத்து மேன்மக்களோ வேலைக்கேற்ற கூலி கொடுக்கவேண்டும் என்னும் கடமை உனக்கிருக்கின்ற பான்மையையே உறுதியாக்கினர். உரிமையென்பது கேட்கவே கற்பிக்கும்; கேட்டதைப் பிறகு வற்புறுத்திப்பறிக்கவும்

30 JUN 1981
mm241,N28KN
N3V 4-21

பயிற்றுவிக்கும். மற்றுக் கடமையென்னுங் கொள்கையோ கொடுக்கவே கைகாட்டு குணத்தது. கற்பது கேட்பதற்காயின், அக்கல்விக்குக் கரையில்லை என்றே எளிதில் இயம்பலாம். உரிமை என்னும் நினைவிற்கு அப்புறம் வரம்பேது. வேலைக்காரனும் எசமானனும் இவ்வேலைக்குரிய நீதியாய கூலி இது என்பதை ஒருபோதும் ஒவ்வமாட்டார். ஆதலின் அதனை ஒரு தலையாய் விடுவதன்றி உலகமனம் அமைதியடைய வேறு வழியில்லை. எனின் அதனை யார்பால் விடுவது? உரிமையென்று கேட்பவன் மாட்டோ, கடமையென்று கொடுப்பவன் மாட்டோ? கேட்பவன்பால் வைத்தால், எவ்வளவு இறுக்க இயலுமோ அவ்வளவுங் கேட்கின்ற உரிமை தனக்குண்டு என்னும் எண்ணம் அவனை அறியாமலே வளரத் தலைப்படுவது இயற்கை. கேட்பதற்குப் பேரெல்லை இருக்க இயலாதாகையால் தன் உரிமை முழுவதுந் தான் எய்தியதாக அவன் எண்ணநேர்வது அருமை. ஆதலின் கொடுப்பவன் மாட்டே அக்கடமையைப் பூட்டிவை, என்றனர் மேலோர். ஆம், இவன் அக்கடமையைத் தன்னுலியன்றவளவு சிற்றெல்லைக்குள் சுருக்கி ஏற்ற கூலியை நீதிப்படி ஈயாதிருந்தாலோ—என்ற கேள்வி இச்சமயம் நமது வாசகர்கள் மனங்களில் விரைந்தெழுகின்ற தென்பதற்கு ஐபமில்லை. இதற்கு உத்தரம், அமரிக்க தேயத்து ஆசிரியப் பெரியோர், ரால்ப் வால்டோ எமர்ஸன் (Ralph Waldo Emerson) தம் பொய்யாமொழிகளால் தருவதைக் கேட்போம்.

"The same guards which protect us from disaster, defect and enimity, defend us, if we will, from selfishness and fraud. Bolts and bars are not the best of our institutions, nor is shrewdness in trade, a mark of wisdom. Men suffer all their life long, under the foolish superstition that they can be cheated. But it is as impossible to be cheated by anyone but himself, as for a thing to be, and not to be at the same time. There is a third silent party to all our bargains. The nature and soul of things takes on itself the fulfilment of every contract, so that honest service cannot come to loss. *If you serve an ungrateful master, serve him the more. Put God in your debt.* Every stroke shall be repaid. The longer the payment is withholden, the better for you; for compound interest upon compound interest is the rate and usage of this exchequer"

[நாசம் குறை பகைகளினின்று ஆதரித்துக் காக்கின்றவைகளே, நாம் உடன்படுவோமெனின், மற்றவர் செய்யும் சுயநயக்கொள்கைகளினின்றும் மோசத்தினின்றும் நம்மைக் காக்கின்றன. தாழ்கோலும் பூட்டும்நம் சாதனங்களில் சிறந்ததல்ல; வர்த்தகத்தில்காட்டும் நுட்பமும் சாமர்த்தியமும் நம் அறிவிற்கு அடையாளங்களுமல்ல, தாம் பிறரால் வஞ்சிக்கப்பட இயலும் என்னுமோர் மூடநம்பிக்கையால் மனிதர் தம் வாழ்நாள் அளவெல்லாம் வருந்துகின்றனர். ஒரு பொருள் ஒரே சமயத்தில் இருப்பதும் இல்லாததும் ஆகி நிற்றல் எவ்வாறு இயலாதோ, அவ்வாறே, ஒருவன் தன்னாலேயே அன்றிப் பிறரால் வஞ்சிக்கப்படுவதென்பதும் இயலாதாம். மனிதர் இருவருக்கிடையே நடக்கும் விவகாரங்களுக்கெல்லாம் மௌனமாய மூன்றாந்திறத்தவரும் ஒருவர் உளர். விஷயங்களின் இயற்கையாய அந்தரான்மா, நாம் செய்து கொள்ளும் ஒவ்வொரு உடன்படிக்கையையும் நிறைவேற்றிவைக்கும் பொறுப்பைத் தானே வகித்துக்கொள்கின்றது; உதவும் உண்மையான ஊழியம் ஒன்றும் நஷ்டமாய் முடிய இயலாது. [illegible] எசமானனுக்கு நீ ஊழியம் செய்ய நேர்ந்தால், [illegible]தைப் பின்னும் நன்றாகச் செய். கடவுளை உன் கடன்[illegible]க்கிக்கொள். நீ செய்யும் வேலை ஒவ்வொன்றிற்கும் ஏற்ற பிரதிபலன் உனக்குச் செலுத்தப்படுவது திண்ணம். அது செலுத்தப்படாமல் எத்தனைக் கெத்தனை வைத்துக்கொள்ளப்படுகின்றதோ, அத்தனைக் கத்தனை உனக்கு நல்லதே; ஏனெனில், வட்டிக்குமேல் வட்டியோடு கொடுப்பது இந்தப் பொக்கிஷத்தின் விதியும் வழக்கமும் ஆம்]

இவ்வாசகத்தின் ஒவ்வொரு வாக்கியமும் உலகத்தைத் தனித்தனி உய்விக்கவல்லது. கெடுமதிபிருத்தலாலே மேனாட்டார் இவ்வுறுதிமொழிகளை யெல்லாம் கைகடக்கவிட்டனர். எமர்ஸன், வேலைக்கேற்ற கூலி கேட்கும் உரிமை உளதென்று உரைக்கமாட்டார். அக்கடமை மற்றவன்பால் உளதென்றே குறிப்பார். அக் கடமையை அவன் செலுத்தவேண்டிய பொறுப்புக் கடவுளுடையது. கடவுள் இம்முறையில் "ஜாமீன்தார்" ஆகி நிற்பதால் உனக்கென்ன பயம். கடன்காரன் செலுத்தாததைக் கடவுள் செலுத்திவிடுவது நிச்சயமாகையால் நீ ஒன்றிற்கும் விசாரப்படவேண்டாமே. உனக்கோர் உரிமை உளதென்று நம்புவதைக்காட்டிலும் கடவுள் தன் கடமையைச்செய்வார் என்று விவகரிப்பது எல்லாப்படியாலும் உத்தமமன்றோ. வேலைக்கேற்ற கூலியுரிமை என்னுமிவ்வுதாரணம் உரிமை என்றபெயரால் உலவுகின்ற ஒவ்வொன்றிற்கும் ஒக்கும். இதனைத்தான், கடவுள்தலையில் பாரத்தைப் போடுவதென்னும் மூதுரையால் விளம்பினர் நம் முன்னோர்.

எல்லாருக்கும் இருப்பது கடமையேயன்றி ஒருவருக்கும் ஓர் உரிமையும்இல்லை என்று கூறினோம். இதன்படி, நாம் பிறர்க்கு நன்மைசெய்யவேண்டுமென்னுங் கடமையே காட்டப்படுகின்றது. பிறர் நமக்குத் தீமைசெய்யலாகாது என்னும் உரிமை நமக்கில[illegible] அந்தக் கடமை பிறர்பால் உளது; அதனை அவர் கெடுத்தாராயின் அதற் கீடுசெய்யக் கடவுள் இருக்கின்றார்.

நம் தமிழர் இன்னுஞ் சிறிதுதூரம் முன்சென்றார். தன்திறத்துப் போர்த்தந்திரத்தை வலியச்சென்று பகைவர்க் குரைப்பதே தருமமென்று சாதித்த உதிட்டிரன், மற்றவர் நமக்குச் செய்யும் தீமையைப் பொறுக்கும் கடமை நமக்குளதென்று உரைப்பதோடு, நமக்குத் தீமைசெய்கின்ற உரிமையே, வேண்டுமெனின், பிறர்பால் உளதென்று ஒருவாறு உன்னுவான். தம் மனையாளை மன்னவையில் துகிலுரிந்து தம்மையும் நிந்தித்ததெல்லாம், "உரிமையுடன் தம்பியர் அன்று உணர்வறியாமையின் செய்தது" என வீமனுக்கு விளம்பினனென்றால் அதனிற் பெரியது வேறொன்று உளதோ! அந்தச் சொற்களின் மெய்ப்பொருள் விளையத்தகாத களர்நில மாயிற்றே இந்த நாடு—யார் செய்த பாவமோ. உரிமை உரிமை என்ற ஒன்று உளதாயின், இப்படிப் பிறரைக் கெடுப்பதற்குரிய உரிமையே அது ஆகலாமன்றி வேறில்லை. "நம் உரிமையைக் கவர்ந்த வெய்யோன்" எனச் சுயோதனனை வைத வீமசேனனைப்பரிகசித்து," உரிமையென்பதொன்று எங்காளுமில்லை. அப்படியொன்று உளதாயின் பிறர் நமக்குத் தீங்குசெய்யும் உரிமையே அது" என உறுபொருள் உணர்த்துமாறு விளையாட்டாகக் கூறிய அம்மாற்றத்தை உண்மையெனக் கொள்ளினும் பிழையன்று. நமக்குத் தீங்குசெய்கின்ற உரிமை பிறர்பால் உளதென்று வேண்டுமெனின் கொள்க. கொண்டு, தம் உரிமையையே அவர் கையாண்டனர் என்ற பான்மையில் அத்தீங்குகளை எல்லாம் தாங்குக. நமக்குத் தீங்கு செய்கின்ற உரிமை பிறர்க்கு உளதெனின், மற்றவர்க்குத் தீங்கு செய்கின்ற உரிமை நமக்கும் உளதன்றோ—ஆதலின் இக்கட்டுரை பிழைத்ததென மயங்கற்க. "மற்றவர் உனக்கு யாதுசெய்ய வேண்டுமென்று விரும்புகின்றாயோ, அவ்வண்ணமே நீயும் மற்றவர்களுக்குச் செய்"—(do unto others as you would be done by)—என்னும் வாக்கியம் மாறுடப் பெருமையின் எல்லையை எட்டிவிட்டதென்று எண்ணவேண்டா. இதனினும் உயர்ந்தது அது!

[illegible]

அப்பர்

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

24. யோகம்

[385-வது பக்கத் தொடர்ச்சி]

9. ஹடயோகம் * (i) இருவகைத்தவம்

ஹடயோகம் இருவகைத்து — ஞானமார்க்கத்தில் செய்யும் நிஷ்காமிய ஹடயோகம் ஒன்று; இச்சைகள் பொருந்தி அஷ்டமாசித்திகளையும்,பெறுவதற்கரிய இகபரப்பேறுகளையும், பெறக்கருதிச் செய்யும் காமியார்த்த ஹடயோகம் மற்றொன்று. இரண்டாவதாய்க் கூறப்பட்ட யோகமார்க்க வைராக்கியமுள்ளவர் ஞானமார்க்கத்தில் பொருந்தாதிருந்தமையால், அவர்கள் முத்திபெறப் பாத்திரராகாரெனத் தாயுமானர் கூறுவார்:—

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
　　பரப்பை வலமாக வந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
　　பசிதாக மின்றி யெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
　　வன்பசி தனக்கடைத்து
மௌனத் திருந்துமுயர் மலைநுழை தனிற்புக்கு
　　மன்னுதச நாடி முற்றுஞ்
சுத்திசெய் தும்மூல பிராணனோ டங்கியைச்
　　சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய அமுதுண்டும், அற்பவுடல் கற்பங்கள்
　　தோறுநிலை நிற்க வீறு
சித்திசெய்தும் ஞானமலது கதிகூடுமோ?
　　சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
　　சின்மயானந்த குருவே!

தாயுமானவர் - சின்மயானந்த குரு 11.

இதையே அப்பர்,

காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது வேட்கிலென்
ஏல வீசனென் பார்க்கன்றி யில்லையே.

கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிருந்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவா னோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே.

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே.

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி யிருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே.

பாவநாசத் திருக்குறுந்தொகை, 5, 6, 2. 7, 8.

என்று விளக்குவது காண்க. எழுநாவாகிய அக்கினி நடுவே தவஞ்செய்வதைப் பற்றியும் அப்பர்,

எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாக வுணர்கிலார்
அரி யயற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை, 7.

என்பதையும் நோக்குக.

வெளிவேடம் துறவாகாததுபோல், *யோகக் கருவிகளாற் பயனில்லையென்பதற்கு அப்பர் திருவாக்கு:—

கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே!
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே.

திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை. 8.

ஆயினும் ஹடயோகமுறையில் தவஞ்செய்வோர்கள் சிலவகைக் கருவிகளையும் பீடத்தையும் விரும்புவரென்பது முன்னரே கண்டோம். திருப்பெருந்துறை புராணத்தில் யோகபீடச் சிறப்புரைத்த படலத்தில் கௌரிதேவியார் செய்த ஹடயோகத் தவத்தை அடியில் வருஞ் செய்யுள்களிற்காண்க:—

ஒருப தம்மடித் தோர்பதம் ஊசிமேன்
மருவ வூன்றி மலர்க்கை யிரண்டையுங்
குரும ணிச்சடை மீது குவித்துமுக் †
குருவ நன்னுதி மீதுகண் ணுற்றிட.

அவாவொ டுங்கும் பகத்திறல் வாயுவை
உவாம தித்தலத் தொன்ற வொடுக்கியே
சிவாய மந்திர நாவிற் செபித்துமேற்
றவாத சாந்தத்திற் சோதியுந் தானுமாய்

ஏக போகமா யெங்கும் வியாபக
மாகி யின்ப வதீத சுகத்தொடு
மோக மாய்க்குருந் தத்துறை மூர்த்தியைப்
பாக வுட்கொடு பண்ணினள் மாதவம்.

எனத் தியானலட்சணமும், மகாமந்திரக் கருவியும் பெற்று உமையவள் செய்த ஹடயோகம் முறையே அஷ்டமாசித்திகளை அளிப்பதற்கு யாது தடை?

* இதைத் தமிழில் "அடையோகம்" என்று வழங்குவர். ஆயினும் இப்பெயர் வடசொல்லாகக் காணப்படுகின்றதால் சாதாரண உலக வழக்கிலுள்ள பெயரை இங்கு இடவானோம்.

* மெய்த்தவத்தை வேதத்தை வேத வித்தை,
　　விளங்கிளமா மதிசூடும் விகிர்தன் றன்னை
எய்த்தவமே யுழிதந்த வேழை யேனை,
　　யிடர்க்கடலில் வீழாமே யேற வாங்கிப்
பொய்த்தவத்தா ரறியாத நெறிநின் றானைப்
　　புனல்கரந்திட் டுமையொடொரு பாக நின்ற
தத்துவனைத் தலையாலங் காடன் றன்னைச்
　　சாரதே சாலநாட் போக்கி னேனே.

திருத்தலையாலங்காடு - திருத்தாண்டகம். 3.

† கேசரிமுத்திரை—இம்முத்திரையைப்பற்றியும் ஏனைய முத்திரைகளைப் பற்றியும் பின்னர் வரும்.

(ii) ஹடயோகத்தின் அங்கங்கள் (சரியை, கிரியை, யோகம் ஞானம்) ஹடயோகிக்குத் தேகதத்துவங்கள் யாவும் பலத்துட னிருக்கவேண்டுமென்றும் * யௌவன பருவத்தில் பிரமசாரியனாய் ஆரம்பிப்பானாயின், அது எளிதில் முறைப்படி சித்திக்குமென்றும் கண்டோம். அதைத் தாயுமானவரும் தன்னைப் பழித்துக் கொள்வதுபோல்,

பாகத்தி னாற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ யிசையுமில்லை
யோகத்திலே சிறிது முயலவேன் றால்தேகம்
ஒவ்வாது; இவ்வூண் வெறுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கும்; அல்லாது கிரியைகள்
உபாயத்தினாற் செய்யவோ
மோகத்திலே சிறுது மொழியவில்லை; மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்க வென்றால்
முற்றாது பரிபாக சத்திக ளநேகம்; நின்
மூதறிவிலே யெழுந்த
தாகத்திலே வாய்க்கு மமிர்தப் பிரவாகமே
தன்னந் தனிப்பெருமையே
சர்வபரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

சச்சிதானந்த சிவம் 3.

என்று எடுத்துக் காட்டுகின்றார். ஏன் ? இவ்வாறு யோகத்திற்குத் தேகம் மிகவும் மேன்மையதா யிருக்க வேண்டுமென்றும், மேலான பயன்தரும் அதைச் சுமையென்று பழிக்கலாக தென்பதும் மேலோர் கொள்கையாம்,

பின்னும் உடற்சுமையாப் பேசும் வழக்கதனால்
என்னபலன் நாமுற் றிருந்தோமே—அன்னதனால்
ஆநந்தந் தானேதா னாகுமெம் மையனே
ஏனிந்தத் துன்பம் இனி.

தாயுமானவர்—உடல் பொய்யுறவு 37.

உரைத ளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிட நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரோடே
விரவு மீன்விர வாரை விடுமினே.

திருநல்லம் - திருக்குறுந்தொகை 5.

அடயோக சாதனத்தில் நான்கு உட்பிரிவுகளைக் காணலாம். சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கும், ஒவ்வொன்றும் உள்பிரிவாய், சரியை கிரியை யோகம் ஞானமென்னும் அங்கங்களைப்பெற்றிருக்கின்றதென்று ஆன்றோர் மொழிவர். அவற்றுள் ஹடயோகத்தின் உட்பிரிவுகளாய், யோகச் சரியை, யோகக்கிரியை, யோகயோகம்யோகஞ்ஞானமென்னும் தன்மைகளை இங்குநோக்குவோம். யோகத்தில் சரியை யாவது அத்தவத்திற்குத்தக்க இடத்தில் சேரல்; அவ்விடத்திலுள்ள நதியில் மூழ்கி மரவுரி தரித்து, பசிக்கென்று உணவுதேடாமல், அங்குச் சுற்றிலுமுள்ள புல்லரிசிப்பாலும் உலர்ந்த இலைகளும் உண்டு தவக்கருமத்தில்ஆழச்செய்யும் இடவசதிகள் முன்னரே அமைத்துக்கொள்ளலுமாம். இத்தகைய யோகச்சரியையும், அதன் பின்னர்ச் செய்யும் யோகக்கிரியைகளும் அடியிற்காணும் தாயுமானவர் பதிகம் விளக்கும் :—

மரவுரி யுடுத்தும், மலை வனநேற் கோறித்தும், முதிர்
வனசரகு வாயில் வந்தால்
வன்பசி தவிர்த்தும், அனல் வெயிலாதி மழையால்
வருந்தியும், மூல அனலைச்
சிரமள வெழுப்பியும், நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்ல வென்று
சிற்சுக அபேட்சையாய் நின்னன்பர் யோகம்
செலுத்தினார் ; யாம் பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ வெலாமுடுத்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்த மின்றி
இரவுபக லேழையர்கள் சையோக மாயினேம்
எப்படிப் பிழைப்ப துரையாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே.

எங்குநிறைகின்ற பொருளே. 9.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

ஒரு பங்களா - வலதுபுறம் வக்கீலின் ஆபீஸ். தாழ்வாரத்தில், நாற்காலிகள், சாய்மானக் குறிச்சிகள், பலவித மேஜைகள். இடதுபுறம் பங்களாவீடு - தாழ்வாரம் - மேல்மாடத்திற்குச் செல்லும் மரப்படிகள் தெரிகின்றன. அம்மாடத்தில் நிற்போரும் நம் கண்ணுக்குத் தெரியும்படி அறைகள் கட்டப்பட்டுள. இடது தாழ்வாரத்துக்குக் கீழ் பின்பக்கமாக வலப்புறம் ஒரு அறையும் அதன் வாயிலும் தெரிகின்றன. கதவு திறந்திருக்குமாயின், உள்ளே கொலு வைத்திருப்பதும் வெளியிலிருந்தே புலப்படும். இவ்வறைக்கு வலதுபுறமும் ஒரு கதவு இருப்பதை ஊகிக்கலாம். ஆபீசு அறைக்கும் கொலு அறைக்கும் இடையே உள்ள பாதையின்வழியாய், தூரத்தே மோட்டார் லாயமும் தெரிகிறது. அழகிய செடி கொடிகளும் பூந்தொட்டிகளும் தாழ்வாரங்களிலும் பாதையின் இருமருங்கிலும் அழகு செய்கின்றன.

[முன்கதவு வழியாய் ஆதிமூலம் விரைந்தோடி வருகின்றாள். கையில் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்தெரிந்து உயரத் தூக்கிக்கொண்டு]

ஆதி:—எங்கே அம்மா ! எங்கே என் அம்மா ! (உரக்க) அம்மா ! அம்மா ! எங்கே காணோம்–வெளிச்சம் விளக்கமாகத் தெரியவில்லையே—

[காமாக்ஷி ஆதியைத்தொடர்ந்தோடி வருகையில் முன்கதவுப் படி யிடறி விழுகின்றான்]

காமா:—அடி - கொலைகாரி-என்ன ஆட்டம் ஆட்டி வைக்கிறாய், கிழவி என்னை...செத்தேன்...உன்னைப் பிடிக்காமல் விட்டேனா (எழுந்து தொடர்கின்றான்.)

ஆதி :—(மீண்டுமொரு தீக்குச்சியைக் கொளுத்தி) ஆ ! மூட்டைகளெங்கே ! அம்மா வந்துவிட்டாள்! அம்மா! (கூவிக்கொண்டு) அம்மா ! (வலப்புறஅறைக்குச் செல்ல)

காமா :—வீடு இன்று எரிஞ்சு சாமபல்தான்—தீக்குச்சிப் பைத்தியம்! டே மாயாண்டி !...இன்னும் அந்தத் தடியன் கூட்டிவரவில்லையே சாமியாரை ! மாயாண்டி !

ஆதி:—வந்துவிட்டாள் அம்மா (உவகையுடன் குதிக்கின்றாள்) அம்மா! எங்கே ஒளிந்திருக்கிறாய்—வா வா !

காமா:-இதோ, வந்தேன், பிடித்தேன்! விடேனினி ! (இறுகப் பிடித்துக்கொள்ள)

ஆதி:—ஐயையோ—நீயா! (திமிறி), அம்மா எங்கே?

காமா :—நான்தான் அம்மா, பின்னே யார்—(ஒரு குலுக்குக் குலுக்கி) தா இங்கே ! (தீப்பெட்டியைப் பிடுங்கி எறிந்து) மாயாண்டி, கயிறு கொண்டாடா ! சீக்கிரம் !

ஆதி :—விடு—நான் போகவேண்டும், அம்மா எங்கே? நீ அம்மி அல்லவா ? (திமிறுகிறாள்)

காமா :—குழவி நீ - அம்மியையே மசிக்கிறாயா ? (சுற்றிப்பார்த்து) நல்லவேளை காளைமாடு அறுக்காத கயிற்றை இந்த—நேற்றுப் பிறந்த குஞ்சு அறுக்கப் போகிறதா? —வா இங்கே ! (கம்பத்தில் கயிறு கொண்டு கட்டப் போகையில்)

ஆதி:—அம்மா ! —அம்மா ! (அழுகின்றாள்)

காமா :—இறுக்கி நான் சிறையிலுன்னைச் செறித்தபின் கூவலாம் தொண்டைகிழிய—இயற்பெயரை மாற்றி சுதந்திரதேவி என்று செல்லப்பேர் வைத்தானல்லனோ அந்தத் துலுக்கத் தூர்த்தன்—கூப்பிடு அப்போ! (தூணில் கட்டிக்கொண்டே) - மாண்டதுவரும் மீண்டும் !

ஆதி :—அம்மா ! அம்மா !

ஒரு குரல் :—வந்தா னிதோ துலுக்கத் தூர்த்தன்! அழைத்த தெதற்கு ! நூறாண்டு வாழ்வேன் நான் - ஐயமில்லை. (வலப்புறத்திலிருந்து வருகின்றான் தியாகு).

காமா:—நூறாண்டா? கால் இங்கு நீ வைத்ததற்கே உன்னை இன்றைக்கே கொல்விக்கிறேன் - மாயாண்டி ! உருமபிள்ளை !! யாரடா !

ஆதி :—அம்மா! அம்மா ! (அலறிக்கொண்டு தியாகுவை நோக்குகின்றாள், திமிறுகின்றாள்).

தியா :-கொல்லுங்கள் என்னை ! குழந்தையை விடுவியுங்கள், - வந்தேனம்மா-குஞ்சு! இதோ சிறை மீட்டுகின்றேன் (பாய்ந்தோட).

காமா :—போடா துலுக்கா ! முதலில் - வந்தேமாத்திரம்-தந்தேம் பாத்திரம் - வெந்தோம் காத்திரம்-என்று பிதற்றினாயே ! அந்த இந்தியதேவியைச் சிறை மீட்டியபின் இங்கு வா - தொடாதே இவளை.

தியா :—அவள் யார், இவள் யார் ? இவளை விடுவிக்கத் திறனில்லாத நானா அவளைச் சிறை மீட்ட முடியும் !

காமா:—எங்கே! பலாத்காரமல்லாதவழியில் விடுவி பார்க்கலாம் இவளை ! காந்திக்காரனல்ல நீ? கைகட்டிய வண்ணமே நீ கிழவியென்னைக் கொன்று குவிக்காமல்......

தியா:—துலுக்கனென்றீரே என்னை!—ஆம் - நான் முகமதலிக்காரனும், இந்நாள் தேசபந்துக்காரனும் தான்! சட்டசபைத் தேர்தல் இன்றைக்கு இருபத்திரண்டாம் நாளல்லவா ? ஆதலால்......

காமா:—நல்லது - நீயும் காந்தித்துரோகி யாய்விட்டாயா? ஆமாம் - பஞ்சாயத்துக்கள் ஆங்காங்குச் சர்க்காராதரவிலேயே பற்பல நிறுவி இருக்கின்றாய் என்று ராஜா கூட உன்னை எள்ளிச்சிரித்தான்—உன்னிடம் சாந்தம் இனி ஏது! கட்டவிழ்த்து விடுகிறேன். (அவிழ்த்து விடுகையில்)

தியா:—பார்த்தீரா—எனது சாந்தம் வென்றுவிட்டதே? —வாம்மா! குஞ்சு! தெரிகிறதா நான்யாரென்று?

ஆதி:—அம்மா எங்கே? அம்மா! !

காமா:—(அவிழ்த்து)நான்செய்வது உனக்குக் கொடுமையாய்த் தோன்றலாம் ! அம்மம்ம! இவள் செய்யும் தீமைகளைச் சொல்லமுடியாது; எப்பொழுதும், அம்மா அம்மா! என்றே கூக்குரல்! அரற்றல், அழுகை

தியா:-(கண்ணீர் தளும்புகின்றது, துடைத்துக்கொண்டே) ஆண்டு ஐந்தும் நிரம்பவில்லையே - தாயைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வாள் ! கண்ணே! வவம்மா ! குஞ்சு !

ஆதி:—நீயா - அம்மா! (பாய்ந்து இடுப்பைக் கட்டிக் கொள்ள)

தியா:—(வாரிஎடுத்துத் தோள்மேல் வைத்துக்கொண்டு) நான்........

காமா :—முகசாடையில் மயங்குகிறாள் இப்போ...

ஆதி :—(தியாகு அணிந்துள்ள துலுக்கத் தொப்பியைத் தள்ளி) நீயா—பொய்—நீ அம்மா அல்ல—(திமிறிக்கொண்டு கீழ்குதித்து)—அங்கே ஒளிந்துகொண்டிருக்கிறாள், கட்சிக்காரர் அறைக்குள்ளே ! (வலப்புறம் ஓடி மறைகின்றாள்)

காமா:—போய்ப் பிடிக்கவேண்டும் இல்லாவிட்டால் அவ்வளவும் பாழே, கண்ணாடிகள் உடைபட்டுச் சுக்கல் சுக்கலாய்க் குவித்திருப்பதைக் காட்டுகிறேன் பார் - பின்புறம்.

தியா:—இதெல்லாம் ஒருநஷ்டமா? இப்படியேனும் விளையாடித் தாயிழவை மறக்கட்டுமே! ஆனால் கையில் காயம்பட்டுக்கொள்ளவில்லையே ?

காமா:—காயமில்லாமலா ? கண்ணாடிகள் எவ்வளவோதரம் கிழித்து உடம்பெல்லாம் காயம் !

தியா:—ஆம் - காயம் உடம்பே ! (சிரிக்கின்றான்)

காமா:-வீரன் நீ, காயங்கள் என்றாலும் சிரிக்கிறாய்! எனக்கு அழுகைவருகிறது. (கண்ணைத் துடைத்துக் கொள்ளும் பாவனையாய்) பாவம் என்ன தெரிகிறது குழந்தைக்கு ?

தியா:—(சிரித்துக்கொண்டு) அதன் போக்கில் விட்டு விடுவோம்.

காமா :—சாகத்தான் !

தியா:-(சிரித்துக்கொண்டே) சுதந்திரமே நன்மருந்து! கண்ணாடிகள் கிழிக்கின்றன என்ற உணர்வு தோன்றாமல், தனது நிழல்கண்டு களிக்கும் விளையாட்டே இன்னும் மேல்நிற்குமாயின் - நிழலாடி, கிழிபட்டு, அழுதழுது உணர்ந்து கொள்ளும்வரை நாம் தடுக்க வேண்டா.

காமா :—போஷ் ! நான் அடக்கி வைத்திருக்கையிலேயே இத்தனை வீச்சும் விஷமும்.

தியா:—தரங்கம்பாடியில் ஒருஆசிரமத்தை நடத்துகிறாள் ஓர் வெள்ளைமாது. அங்குக் குஞ்சுவை அழைத்தேக இப்பொழுது வந்திருக்கிறேன். மறு நவராத்திரிக்குள் எப்படி ஆகின்றாள் இந்தப் பொன்குஞ்சு என்று பாருங்கள் !

காமா :—நான் மாட்டேனப்பா! நவராத்திரிப் பண்டிகைக்குச் சீர் நீ கொணர்ந்தது இதுதானா? அவளைச் சீரழிக்க!

தியா :—என்ன சீர்? யாருக்கு? நவராத்திரிச் சீர் என்று நான் கேட்டதில்லையே!

காமா:—யாருக்கா, உன் தங்கைக்குத்தான்-பொன்னிக்குத்தான்.

தியா:—(சிரித்துக்கொண்டு) பொன்னிதான் போய்ச் சேர்ந்தாளே! இன்னமும் சீரும் வரிசையுமா?

காமா:—தெரிகிறது தெரிகிறது - அவள் இறந்தது உனக்குக் களிப்பே.

தியா :—எனக்கா? (கண்கலங்க).

காமா :—சீர் வரிசை என்று மன்றாடி உங்களைக் கேட்டுக்கேட்டு வாட்டிவிட்டோமோ? கொடுத்துக் கொடுத்து நீங்களும் கைசோர்ந்து போனீர்கள்-பாவம். சாகாளா தங்கை என்று கடவுளை வேண்டிக் கொண்டதற்கோ கணக்கில்லை. பின்னேன் சுதந்தர தேவி என்று அவள்பெயரை மாற்றினாய் நீ? ஆம் அவள் சாகவேண்டும் என்றே? பொன்னி அம்மனுக்குக் கோவம் வந்தது — அந்த முழுக்குப் போட்டபோதே காவேரியம்மன் மூழ்த்தி அவளைக் கொன்றிருக்க வேண்டும். சிறிது உளமிரங்கி கரையேற்றிக் காய்ச்சலேற்றிக் காட்டில் தள்ளினாள்.

தியா:—சிரிப்பே தருகிறது உங்கள் வாதம். சிரித்தால் களிக்கிறேன் என்கிறீர் பாட்டி நீங்கள்! காந்திப் பித்து என்னைப் பிடித்தபோது தோன்றியது அவ்வெறி! வேடிக்கையாய் நான் பொன்னியை அப்படிப் பேரிட்டழைத்தேன். வேடிக்கையை நீங்கள் என்னென்னவோ?

காமா:—சுதந்தரமாம்! என்ன அசட்டுப் பெயர்! ஆகா! நீ இட்ட நாமத்திற்குத்தகவே - அவளும் சுதந்தரமாய்—துர் தந்திரங்களால்......

தியா:—என்ன?

காமா:—பயமேன் எனக்கு? அவனோடு போனாள், இவனோடு போனாள்—கடைசியில் எமனுடன் போனாள் (சிரிக்கிறாள்)

தியா:—உன் வாய் புழுத்துப் புரையோடி...

காமா:—(சிரித்துக்கொண்டே) அவனுடன் அந்த ஆஸ்பத்திரிக்குப் போனாள் - இவனுடன் இந்தத்திருப்பதிக்குப் போனாள்—கடைசியில் யமலோகம் ஏறினாள் என்றேன். நாட்டுப்பெண் பொன்னான பெண்—பொன்னி அவளை நான் என்றைக்கும் மறவேன்—சீறி விழாதே என்மேல்—அது—என்ன உன் பெட்டியா?

தியா :—ஆம்- அவைகள்கூட - அங்கேயிருக்கிறதே, அதுவும்!

காமா :—வீட்டில் இங்கே பொம்மைகள் இல்லை என்று ஜாதிக்காய்ப் பெட்டிகள் அடுக்கடுக்காய்க் கொண்டுவந்திருக்கிறாய் - உனது பொம்மைகளை நீயே கொண்டுபோ. பாரங்கே—அறை நிறைய ஒன்பது படிகள் இறக்கி......

தியா:—(கொலு அறையைப்பார்த்து, கண்கலங்கிப்பிறகு கண்ணீரைத்துடைத்துக்கொண்டு) என்னவிது! பொன்னி இறந்து மாதம் நான்கு மாகவில்லை — கொலுவும் கொண்டாட்டமுமா? சரி, சரி!

காமா :—பின்னே என்ன செய்ய? குழந்தை அழுவாளே! - மற்ற வீடுகளிலே பொம்மைக் கொலு பாடும்போது, இந்தச் சுடுகாட்டி லில்லாவிட்டால்.

தியா:—பிணங்களைச் சூழ்ந்து நீங்கள் அழுவீர்கள்!

காமா :—நானா?

தியா :—(சிரித்து) குழந்தை அழுவள் - ஆதலால் நீங்களும்.

காமா :—நானா?

தியா :—(சிரித்து) குழந்தை குழைவள் - ஆதலால் நீங்களும் என்றேன் - குற்றமா.

காமா :—குற்றம் - என்றால் என் தலைமேல் கொள்ளையும் குன்றும் குவிக்கலாம் - இன்றுமட்டுமா கொலு? மூன்று நான்கு மாதங்களாகவே வீடெங்கும் பொம்மைகள், பாச்சிகள், பாவைகள் இறைபட்ட வண்ணமே. போவோர் வருவோர் தூக்கிக் களவு செய்கின்றனர். இவளுக்குமட்டும் இவை வேண்டாம். அங்கும் பொம்மைகள் இங்கும் பொம்மைகள்.

தியா :—எங்கும் பொம்மைகள் - நம் வாழ்வே ஒரு பொம்மை வாழ்வு. பின் ஏன் - நவராத்திரி விழவிலே சத்தி அன்னையைத் தொழுதேத்தாமல் கொலு அடுக்குகிறோம் - பொம்மைகளை?

காமா :-நீ கொணர்ந்த பொம்மைகளையும் கொடுக்க மனமில்லை உனக்கு! சீரில்லை சிறப்பில்லை என்று நான் ஒன்றும் இனிக் கூறவில்லை. நீபோ உன்மூட்டை முடிச்சுகளுடன்.

தியா:—மாப்பிள்ளை எங்கே?

காமா:—யார் இங்கே மாப்பிள்ளை உனக்கு?

தியா:—ஓகோ, அப்படியா! (சிரித்து) ராஜா!

காமா:-ராஜாவையும் அறியேன், ராணியையும் அறியேன். நீ தான் ராஜா! தரித்திரப்பாட்டும் பாடுகிறாயா நீ?—முப்பது நாற்பதுபஞ்சாயத்துக்களை ஏற்படுத்திக் குடியானவர் கடன்களை எல்லாம் விலைக்கு வாங்குவதுபோல், நீயே பணம் முதல்போட்டு ஊரார்க்கு நன்மை செய்வாய். தங்கையின் குழந்தைக்கு ஒரு பாவாடை - பண்டிகை பருவதற்திற்கு?

தியா:-நாட்டுப்புகழ்—வீட்டுப்பதர் - (சிரிக்கின்றான்)

கா :—மாயாண்டி! வாடா - தாழ்வாரத்தில் இருக்கிற மூட்டைகளை வெளியே தூக்கி எறி! (இடதுதாழ்வாரம் ஏறுகையில்)

தியா:—என்னையும்! ஆனால், ராஜாராமன் வரும்வரை நான் நகரேன்!

கா:—நல்லது - நிஜத்தைச் சொல்லி விடட்டுமா? - ராஜா காளத்திக்குப் போயிருக்கிறான் நவராத்திரி வைபவத்திற்கு! வரப் பத்துப்பன்னிரண்டு நாள் செல்லும்! நீ காக்க வேண்டாம் - நான் சாப்பாடு போடமாட்டேன். மாயாண்டி! டே! - எங்கேடா அவன், மாய்ந்தானா - மோட்டாரில் சிக்கிக்கொண்டு!

ஒருகுரல்:—மூட்டாளோட்டியாநான்? - அப்படி சக்கரத்தில் சிக்கி அவன் சாக?

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[387-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

201. உற்றடு பிணியு மூப்பும்
ஊழுறு துயரு நீக்கிச்
சுற்றிநின் றுலக மேத்துஞ்
சுடரொளி யுருவந் தாங்கிப்
பெற்றதோர் வரம்பி லின்பம்
பிறழ்விலா நிலைமை கண்டாய்
மற்றவை நிறைந்த மாந்தர்
பெறப்படு நிலைமை மன்னா. 84.

உற்று - உடலைப்பற்றி, அடு - வருத்துகின்ற, பிணியும் மூப்பும் - வியாதிகளையும் கிழத்தன்மையையும், ஊழ் உறு - பழவினையின் பயனாய் வரும், துயரும் - துக்க துன்பங்களையும், நீக்கி - ஒழித்து, உலகம் - உயர்ந்தோர், சுற்றி நின்று ஏத்தும் - சூழ்ந்து நின்று புகழ்ந்து பாராட்டும், சுடர் ஒளி உருவம் - பிரகாசிக்கும் காந்தியோடுகூடிய திவ்விய சரீரத்தை, தாங்கி - அடைந்து, பெற்றது வரம்பு இல் இன்பம் பிறழ்வு இலா - தாம் பெற்ற ஈறில்லாத இன்பம் என்றும் மாறுபடுதலில்லாத, ஓர் நிலைமை-ஒப்பற்ற முத்தி நிலையே, அவை நிறைந்த மாந்தர் - நல்ஞான முதலிய அவை மூன்றும் நிரம்பப்பெற்ற மனிதர்களால், பெறப்படும் - அடையப்படும், நிலைமை - பதம் ஆகும். கண்டாய் - நீ இதை அறிவாயாக (என்று அம்முனிவன் மொழிந்தருளினான்)

ஊழ் - பழவினை. உலகம் - உயர்ந்தோர். மற்று- அசை. 'அவை' யென்றது மேற்கூறிய இரத்தினத் திரவியங்களை.

---

202. அருந்துய ரறுக்கு மாண்பி
னாரமிர் தவைகள் மூன்றும்
திருந்தநன் குரைப்ப கேட்டே
தீவினை யிருள்கள் போழும்
விரிந்தநல் லறிவின் சோதி
விளங்கலிற் சனங்க ளெல்லாம்
பரிந்தகங் கழுமத் தேறிப்
பவம்பரிந் தவர்க ளொத்தார். 85.

அருந்துயர் - நீக்குதற்கரிய பெருந் துயரங்களையும், அறுக்கும் மாண்பின்-அழிக்கவல்ல பெருமைவாய்ந்த, ஆர் அமிர்து அவைகள் மூன்றும் - அரிய அமிர்தத்துக் கொப்பான அம்மூன்றையும், திருந்த நன்கு உரைப்ப கேட்டு-அம்முனிவன் திருத்தமுறத் தெளிவாகச் சொன்னதைக் கேட்டு, தீவினை இருள்கள் போழும் - தீவினையாகிய இருளைப் பிளந்து அழிக்கும், விரிந்த நல் அறிவின் சோதி - முதிர்ந்த நல்ல அறிவாகிய ஒளி, விளங்கலின் - பிரகாசித்ததால், சனங்கள் எல்லாம் - அதைக்கேட்ட அவரெல்லாரும், பரிந்து - அம்முனிவரிடத்து அன்புகூர்ந்து, அகம் கழும தேறி - மனம் மிகவும் தெளிவுற்று, பவம் பரிந்தவர்கள் - பிறப்பு நீங்கப் பெற்றவரை, ஒத்தார் - போன்றார்.

பரிந்து - பரிவுற்று, அன்பு பொருந்தி. கழும - மிகுதியாக. பரிந்த - கழிந்த, நீங்கிய.

203. மன்னிய முனிவன் வாயுள்
மணிகொழித் தனைய வாகிப்
பன்னிய பவங்க டீர்க்கும்
பயங்கெழு மொழிக டம்மால்
கன்னவில் கடகத் தோளான்
காட்சியங் கதிர்ப்புச் சென்றான்
பின்னவ னுரிமை தானும்
பெருவத மருவிற் றன்றே. 86.

மணி கொழித்த அனைய ஆகி - இரத்தினங்களைப் பொழிந்தாற் போன்று, மன்னிய முனிவன் வாயுள் - பன்னிய-நிலைபெற்ற அந்த முனிவனுடைய வாயாற் சொல்லப்பட்ட, பவங்கள் தீர்க்கும்-பிறப்பு (இறப்புக்களை) நீக்கும், பயம் கெழு-நற்பயனோடுகூடிய, மொழிகள் தம்மால்-உபதேசமொழிகளால், கல் நவில் கடகம் தோளான் - இரத்தினங்கள் இழைத்த கடகங்களையணிந்த தோளையுடைய அந்த ஜ்வலனஜடியாசன், காட்சி அம் கதிர்ப்பு சென்றான் - நற்காட்சியால் தன் மேனிமுழுதும் திவ்ய காந்தியோடு விளங்கினான். பின்- அதன் பிறகு, அவன் உரிமை தானும்-அவனுடைய தேவிமார்களும், பெருவதம் - சிறந்த விருதங்களாகிய நல்லொழுக்கத்தை, மருவிற்று-தழுவினார்கள். அன்று ஏ - அசை.

பவம் - பிறப்பு. கல் நவில்-மலையென்று உவமிக்கத் தக்க, என்றுமாம். காட்சி - இரத்தினத்திரயத்தின் இரண்டாவதாகிய 'நற்காட்சி'. கதிர்ப்பு-ஒளித்தல், பிரகாசம். உரிமை-சாதியொருமை; இது அஃறிணையாதலின், 'மருவிற்று' என்று அஃறிணை முடிபேற்றது. வதம் - 'விருதம்' என்ற வடசொல்லின் விகாரம்.

வேறு.

204. மன்னவன் மடமகள் வணங்கி மற்றவர்
இன்னுரை யமுதமுண் டெழுந்த சோதியள்
பன்னியோர் நோன்புமேற் கொண்டுபாங்கினால்
பின்னது முடிப்பதோர் பெருமையெண்ணினாள்.

மன்னவன் மடமகள் - அம்மன்னனுடைய இளங்கன்னியாகிய சுயம்பிரபை, அவர் இன்னுரை அமுதம் உண்டு எழுந்த சோதியள்-அச்சாரணனுடைய இனிய மொழிகளாகிய அமிர்தத்தை (செவியால்) உட்கொண்டதினால் எழுந்த ஒளியினளாய், பன்னி - ஆராய்ந்தெண்ணி, ஓர் நோன்பு மேற்கொண்டு - ஒப்பற்றதொரு விரதத்தைத் தேர்ந்துகொண்டு, பின் அது பாங்கினால் முடிப்பது - பின்பு அதனை முறையாக ஆரம்பித்து முடிப்பதாகிய, பெருமை எண்ணினாள் - சிறந்த தீர்மானத்தைக் கொண்டாள்.

இவள் மேற்கொண்ட விருதம் 'சக்கர்வாளம்' என்பது மேல் 94-ம் பாட்டால் விளங்கும்.

---

205. முனிவரர் திருந்தடி வணங்கி மூகதேன்
பனிமலர் விரவிய படலை மார்பினான்
கனிவளர் பொழிலிடைக் கடவு ணன்னகர்
இனிதினின் வலமுறை யெய்தி யேகினான். 88.

தேன்மூசு பனிமலர் விரவிய-வண்டுகள் மொய்த்த குளிர்ந்த மலர்களைச் சேர்த்துத் தொடுத்த, படலை மார்பினன் - மாலையையணிந்த மார்பினையுடைய மன்னன், முனிவரர் திருந்து அடி வணங்கி - அச்சாரண முனிவருடைய அழகிய பாதங்களிற் பணிந்து, கனி வளர் - பழங்கள் நிறைந்த, பொழிலிடை - சோலையின் நடுவிலுள்ள, கடவுள் நல் நகர் - சிறந்த ஜினாலயத்தை, இனிதின் இன் - மகிழ்வுடன், வலமுறை எய்தி - வலம் செய்து, ஏகினன் - அவ்விடத்தை விட்டு நகரை நோக்கிப் புறப்பட்டான்.

படலை - கோத்தமாலை; தழையோடு பூக்களை விரவிக் கோத்த ஒரு வகைமாலை. நகர்-நகரம், கோயில், ஜினகரம்.

---

206. வாமமே கலையவர் மனத்தில் வார்பொழிற்
காமவே ளிடங்கொள வருளிக் கண்ணொளிர்
தாமவே லிளையவர் காப்பத் தாழ்கதிர்
நாமவே னரபதி நகர நண்ணினன். 89.

கதிர் தாழ் - ஒளிபரந்த, நாம வேல் நரபதி - அச்சத்தைத்தரும் வேலையேந்திய அரசன், வாமம் மேகலை அவர் மனத்தில் - அழகிய மேகலாபரணத்தையணிந்த தனது தேவிமாருள்ளத்தில், காமவேள் இடம் கொள - மன்மதன் தங்கியிருந்து காம வேட்கையை எழுப்பிடுமாறு, வார்பொழில் அருளி - நீண்ட பொழிலின்கண் விளையாட்டை அவருடன் புரிந்தருளி, கண் ஒளிர் தாமம்வேல் - கண் கூசும்படி ஒளிரும் மாலை அணியப்பெற்ற வேலைப்பிடித்த, இளையவர்- இளவீரர்கள், காப்ப - மெய்க்காவல் புரிந்து செல்ல, நகரம் நண்ணினன் - தனது இரதநூபுர நகரத்துக்கு மீண்டான்.

வாமம் - அழகு. பொழில் (ஆகுபெயர்) பொழில் விளையாட்டு. காமவேள்-காமனாகிய வேள்; முருகவேளின் வேற்றுமை விளங்கக் காமவேள் என்ப; கருவேள், செவ்வேள்என்றும் கூறுப. தாமம், ஒளியுமாம். நரபதி - நரர்பதி, மனிதர்களுக்கு அரசன்.

---

207. அகநக ரரைசரோ டரசன் சென்றபின்
சகதபி நந்தன ரென்னுஞ் சாரணர்
மிகநவின் றிறைவனை வணங்கி விண்ணிடைப்
பகனகு சுடரொளி படர வேகினர். 90.

அரசன்-அரசன், அரைசரோடு - அரசர்கள் பின்தொடர்ந்துவர, அகநகர் - தனது நகரத்தினுள்ளே, சென்றபின் - போனபின்பு, சகதபி நந்தனர்-சகநந்தனன், அபிநந்தனன் என்னும் பெயர்களையுடைய, சாரணர்-அச்சாரண முனிவர்கள், இறைவனை மிகநவின்று வணங்கி-அருகதேவனைப் பலவாறு துதித்துவணங்கி, விண்ணிடை பகல் நகு - ஆகாயத்திலுள்ள சூரியனையும் பரிகசிக்கத்தக்க, சுடர் ஒளி படர - ஜ்வலிக்கின்ற தமது தேஜசு நாலாபக்கமும் சூழ்ந்துபரவ, ஏகினர் - வான்வழியாகச் சென்றார்கள்.

பகல் - பகலைச் செய்பவன், தினகரன், சூரியன்.

---

208. அழற்கொடி யெறித்தொறுஞ் சுடரு மாடக
நிழற்கொடி யதுவென நிறைந்த காரிகைக்
குழற்கொடி யனையவள் கொண்ட நோன்பினால்
எழிற்கொடி சுடர்வதோ ரியற்கை யெய்தினாள்.

அழற்கொடி எறித்தொறும் - நெருப்புக் கொழுந்துகள் வீசும்போதெல்லாம், சுடரும் ஆடக நிழற்கொடி - பிரகாசிக்கும் பொன்னின்ஒளியோடுகூடிய காமவல்லிக்கொடி, அதுவென-இதுதானோவென்று ஐயப்படுமாறு, நிறைந்த காரிகை குழல்கொடி யனையவள் - நிரம்பிய அழகையும் கூந்தலையும் உடைய பூங்கொடியைப்போல்பவளாகிய அச் சுயம்பிரபை, கொண்ட நோன்பினால் - தான் மேற்கொண்ட அந்த விரதத்தினால், எழில்கொடி - அழகிய மின்னற்கொடி யொன்று, சுடர்வது ஓர் இயற்கை எய்தினாள் - பிரகாசிப்பது போன்றதொரு தன்மையை உற்றாள்.

ஏற்கனவே மிக்க அழகு வாய்ந்தவளான அச்சுயம்பிரபை தான்கொண்ட விரதானுஷ்டான சீலத்தால் முன்னினும் மிகத்தேசுற்றுப்பொலிந்தாள் என்பதாம்.

காமவல்லியென்பது விண்ணுலகில் கற்பக மரத்தைத் தழுவிப் படரும் பொன்மயமான ஒரு கொடியாதலின் 'ஆடக நிழற்கொடி' என்றார். நிழல் - ஒளி. எழில் கொடி - கொடி, மின்னற்கொடி.

---

209. முகைத்தவார் முல்லையை முருக்கு மெல்லெயிற்
றகைத்தவார் குழலவ டன்மை யாயினும்
வகுத்தவா றுயர்ந்தன நோன்பு மாசிலா
அகத்துமாண் புடையவர்க் கரிய தில்லையே 92.

முகைத்த வார் முல்லையை - ஒழுங்கான முல்லையரும்பின் அழகை, முருக்கும் - தன்னழகால் கெடுத்த, மெல் எயிற்று - மென்மையான பற்களையும், அகைத்த வார்குழல் - தழைத்த நீண்ட கூந்தலையும் உடைய, அவள் தன்மை ஆயினும் - அவள் (இளம்பிராயமும் மெல்லிய சரீரமும், செல்வ போகங்களும் பொருந்திய) தன்மையளாய் இருந்த போதிலும், நோன்பு வகுத்தவாறு உயர்ந்தன - விருதானுஷ்டான நேமங்கள் (நூல்களில் விதித்தவண்ணம்) யாதொரு குறைவுமின்றி நேராக நிறைவேறி விளங்கின. மாசிலா அகத்து மாண்பு-குற்றமற்ற உள்ளத்தூய்மை உடையவர்க்கு, அரியது இல்லை-செய்வதற்கரிய காரியம் எதுவும் இல்லை.

---

210. இந்திர வுலகமும் வணக்கு மீடுடைத்
தந்திர நோன்பொளி தவழத் தையலாள்
மந்திர நறுநெயால் வளர்ந்து மாசிலா
அந்தர வழற்கொடி யனைய ளாயினாள். 93.

இந்திர உலகமும்-விண்ணுலகத்தவரையும், வணக்கும் - வணங்கச்செய்யும், ஈடு உடை - பெருமை வாய்ந்த, தந்திரம் - செய்சடங்குகளோடு கூடிய, நோன்பு ஒளி - விருதவொழுக்கத்தால் உண்டான - காந்தி, தவழ - பரந்துவிளங்க, தையலாள் அவள், மந்திர நறுநெய்யால் வளர்ந்து மந்திரங்களுடன் வேள்வித்தீயில் ஆகுதி செய்த நல்ல நெய்யால் நன்றாகவளர்ந்து, மாசிலா அந்தரம் அழல் கொடி - களங்கமற்ற ஆகாயத்தில் மின்னும் மின்னற்கொடியை, அனையள் ஆயினள் - ஒத்தவளாய்ப் பொலிவுற்றுத் தோன்றினாள்.

தந்திரம் மந்திரம் - வேதவிதிப்படி செய்யும் வேள்வி, கடவுட்பூசை, விருதம் முதலியவற்றுக்குரிய கிரியைகளும் (செய்தொழில்களும்) மந்திரங்களும்.

---

211. தாங்கருஞ் சுடரொளி சக்கர வாளமென்
றோங்கிரும் பெயர்கொணோன் புயர நோற்றபின்
தீங்கரும் பனையசொற் சிறுமி தெய்வதக்
காங்கொடு பெருஞ்சிறப் பயர்தல் மேயினாள். 94.

தாங்க அரும் சுடர் ஒளி-தாங்குதற்கரிய பிரகாசத்தோடு கூடிய தேககாந்தியை அளிக்கவல்ல, சக்கரவாளம் என்று ஓங்கு இரும் பெயர்கொள் - 'சக்கரவாளம்' என்னும் உயர்ந்துசிறந்த பெயரைக்கொண்ட, நோன்பு உயர நோற்றபின் - விருதத்தை நன்றாகச் செய்து முடித்தபின், தீம் கரும்பு அனைய சொல் சிறுமி - இனிய கரும்பையொத்த சொற்களையுடைய அம்மடந்தை, தெய்வதக்கு-கடவுளாகிய அருகதேவனுக்கு, பெருஞ் சிறப்பு அயர்தல் - பெரிய நைமித்திக பூசனையைச் செய்தலை, மேயினாள்-விரும்பினாள்.

தெய்வதக்கு - தெய்வதத்துக்கு, என்பது அத்துச்சாரியை யின்றி வந்தது. தெய்வதம் - தெய்வம், ஆங்கு, ஒடு - எதுகைக்காக வந்த அசைச்சொற்கள். கள்; 'ஆங்குடன்' என்றுபாடங்கொள்வதே நேர். 'சிறப்பு' என்பது நித்தியமாகச் செய்யப்படுவதன்றி ஒரு நிமித்தம் பற்றிச் செய்யப்படும் விசேஷ பூசனை.

---

212. தண்ணவிர் நிலாச்சுடர் தவழு மவ்வரைக்
கண்ணவிர் சென்னிமேற் கடவுட் டானமஃ
தண்ணலங் கோமக ளருச்சித் தாயிடை
விண்ணவ ருலகமு முவப்ப வேத்தினாள். 95.

அண்ணல் அம்கோமகள் - பெருமைவாய்ந்த மன்னவன் மகளாகிய அவள், தண் - குளிர்ச்சிபொருந்திய, அவிர் நிலாச்சுடர் தவழும் - விளங்கும் நிலாவொளி பரந்த, அவ்வரைக்கண் அவிர் - அம்மலையில் விளங்கும், சென்னி மேல் - சிகரத்தின் மீதுள்ள, கடவுள் தானம் அஃது - அருகன் கோயிலை, அருச்சித்து - அருச்சனைபுரிந்து பூசித்து, ஆயிடை - அவ்விடத்தில், விண்ணவர் உலகமும் உவப்ப - விண்ணுலகத்தவரும் கண்டு களிக்குமாறு, ஏத்தினாள் - துதித்தாள்.

வேறு.

213. ஆதியங் கடவுளை அருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் திருவடி வணங்கினம் 96.

ஆதி கடவுளை - நீ எல்லா தேவருக்கும் முற்பட்ட கடவுளாய் உள்ளாய்; அருமறை பயந்தனை - அரிய வேதங்களை உரைத்தருளியுள்ளாய்; போதி கிழவனை - திவ்வியஞானம் உடையவனாய் இருக்கின்றாய், பூமிசை ஒதுங்கினாய் - தாமரைப் பூவில் தங்கியுறைபவனாக இருக்கின்றாய், போதி......ஒதுங்கிய சேதி செல்வ- செய்தி (செய்கை)யை யுடைய செல்வனே, நின் செம்மை அடி - நினது ஸ்ரீ பாதங்களை, வணங்கினம் - நாங்கள் நமஸ்கரிக்கின்றோம்.

அம், நான்கிடத்தும் சாரியை. கடவுளை, கிழவனை- ஐகாரம், முன்னிலைக் கண்வந்தது. 'கானக நாடனை' (புறம். 5) என்ற விடத்திற் போல.

---

214. காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்கினம். 97,

காமனை கடிந்தனை - நீ மன்மதனை வென்றிட்டான் காலனை காய்ந்தனை - யமனைக் கோபித்திட்டாய்; தேன்மலர் மாரியை - (தேவர்கள் சொரியும்) தேன் நிரம்பிய பூமழையை உடையாய், திருமறுபார்பனை - அழகிய (ஸ்ரீவற்சம் என்னும்) மச்சத்தைக்கொண்ட மார்பை உடையவனாய் இருக்கின்றாய், தேமலர்...... மார்பனை - அத்தகைய, மாமலர் வண்ண - அழகிய மலரின் நிறத்தை உடையவனே, நின் மலர் அடி - உனது தாமரைப்பூவையொத்த பாதங்களை, வணங்கினம் - நமஸ்கரிக்கின்றோம்.

அயன் அரன் அரியாகிய முத்தேவரும் அருகனே என்னும சமணநூற் கொள்கைபற்றிக் காமனைக் கடிந்தனை, காலனைக் காய்ந்தனை, என்றார்.

---

215. ஆரருள் பயந்தனை ஆழ்துய ரவித்தனை
ஓரரு ளாழியை உலகுடை யொருவனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருள் மொழியநின் திருவடி தொழுதனம் 98.

ஆர் அருள் பயந்தனை - நீ எல்லாவுயிர்களிடத்தும் நிறைந்த கருணையை உடையாய், ஆழ்துயர் அவித்தனை - நின்னடியார்களின் பெருந் துயரங்களை நீக்கியுள்ளாய், ஓர் அருள் ஆழியை - ஒப்பற்ற கருணைக் கடலாக இருக்கின்றாய், உலகு உடை ஒருவனை - நீ உலகங்களுக்கெல்லாம் ஏக நாயகனாக இருக்கின்றாய். ஓரருள்......ஒருவனை - அப்படிப்பட்ட, சீர் அருள் மொழிய - அழியாத முத்தியின்பத்தை அடியார்க்கு உதவும் ஆகமங்களை மொழிந்தருளியவனே, நின் திருவடி தொழுதனம் - உன்னுடைய சீர்பாதங்களை வணங்குகின்றோம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[246-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

காலவுணர்வு.

நேற்றுண்ட மாங்கனியின் நினைவு எனக்கு, இன்று வருகின்றது. அம்மாங்கனி இறந்தகால வடிவினதாக விளங்குகிறது. நேற்றுண்ட மாம்பழம், இன்றுண்ட வாழைப்பம் முதலியவற்றின் நினைவுகள் இவ்வேளை நிகழ்காலத்தில் எழும்போது, அவை 'நேற்று' என்ற காலவடிவோடும், "இன்று" என்ற காலவடிவோடுமே நினைவிற்கு வருகின்றன. அவை காலத்தால் முன்னும் பின்னுமாக எவ்வாறு உணரப்பட்டனவோ அந்தத் தொடர்ச்சியையும் விளக்கிக்கொண்டே நினைவிற்கு வருகின்றன. நேற்றொரு பச்சைக் கிளியைக் கண்டேன். இன்று அக்கிளி ஒரு வெள்ளைக் கிளியோடும் பறந்து வந்து நான் இளைப்பாறி நிற்கும் ஆலமரத்தின்மேல் குந்துகின்றது. பச்சைக்கிளியைப் பழங்கிளி என்றும், வெள்ளைக்கிளியைப் புதுக்கிளி

என்றும் உணர்கின்றேன். நிகழ்கால உணர்வில் சில பொருள்கள் பழையனவாய்த் தோன்றுவதெப்படி? அவற்றிற்கு இறந்தகாலவடிவம் எங்ஙனமெழுந்தது?

ஆற்றுப்பெருக்கைப் போலத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் நமது நனவுநிலை, இக்காலவுணர்வேயில்லையானால் எவ்வாறு விளங்கும்? அப்போது நாம் வேறொரு புதுவுலகத்தில் வாழ்வோம். நம்முடைய உள்ளச் செயல்கள் ஒன்றோடொன்று கோக்கப்படாமல், அறுந்து கீழ்வீழ்ந்து தனித்தனியே கிடக்கும் மணிகளைப்போல விளங்கும். இப்பொழுது நான் எழுதிக்கொண்டே வருகையில் முன்னே எழுதிய சொற்கள் பின்னெழுதும்போது என் நினைவில் விளங்காது மறையும். மின்மினிப்பூச்சி இருளில் பறந்து வருகையில், தான் உள்ள இடத்தில்மட்டும் மினுக்கு மினுக்கு என மின்னிய பிறகு, அந்தவிடத்தை இருளிற் புகவிட்டு முன்னே சென்று மின்னுவதுபோல நமது நனவும், செயல் நிகழும்போதுமட்டும் விளக்கமுற்றுப் பின் இருளிற்புகும். இந்தப் புது மின்மினிநிலையை எண்ணிப்பார்ப்பதும் அருமையாகின்றது. காலவுணர்வு நமது உள்ளத்தின் வடிவமாகவும் விளங்குகின்றமையால் அதனை விட்டு எண்ணுவது இயலாததொன்றாம். நமது நனவு நிலையில் கழிந்ததன் நினைவும் உண்டு, நிகழ்வதன் புலனும் உண்டு, வருவதன் நாட்டமும் உண்டு. எனது நண்பர் ஒருவர் செக்கச்சிவந்த மாதுளம்பழம் ஒன்றைக் கையிலேந்தி நகைமுகத்தோடும் என்னை நோக்கி வருகின்றார். அவருடைய தோட்டத்திலே மாதுளஞ்செடி இருப்பதும், அச்செடியின் பழங்களை அவர் முன்னம் எனக்குக் கொடுத்ததும், அப்பழங்கள் மிகச் சுவையுடையனவாகத் தித்தித்ததும் எனது நினைவிற்கு வருகின்றன. இவையனைத்தும் கழிந்ததன் நினைவேயாம். அவர் எதிர்வரும்போது அவர் வடிவமும், மாதுளையின் நிறமும் வடிவமும், அவர் நடையும் பேச்சும் புலனாகின்றன. இவையனைத்தும் நிகழ்காலத் தெதிர்தோன்றுவன. அப்பழத்தை அந்நண்பர் எனக்குக் கையுறையாகக் கொடுப்பார் என எதிர்பார்க்கின்றேன். அந்த மாதுளம்பழத்தின் சுவையைநாடி என் நாவில் நீர் ஊறுகின்றது. இவை எதிர்கால நாட்டம். நமது நனவுநிலை ஒவ்வொன்றிலும் இவ்வாறு கழிந்ததன் நினைவும் நிகழ்வதன் புலனும், எதிர்வதன் நாட்டமும் இயைந்து காணப்படுகின்றன. ஓடும் ஆற்றில் பழைய நீர் மெல்ல ஓடிப்போகப் புது நீர் வந்து அவ்விடத்திற் புகுந்துகொண்டே இருப்பதுபோல, நமது நனவுநிலையிலும், பழையனமறைந்துகொண்டேபோக, எதிர்வதன் நாட்டமாம் புதியன புகுந்துகொண்டே வருகின்றன. நான் இந்தச்சொற்றொடர்களை எழுதிக்கொண்டே வருகையில் முன்முன் சென்ற சொற்றொடர்களில் மிகப்பழமையான நனவில் நிற்பதில்லை; அவற்றைமறந்தேன் என்பதில்லை; அவை இதுபோது மறைகின்றன. அவை மறைந்ததற் களவாக, மேல் எழுதப்போகும் சொற்றொடர்கள் எதிர்வதன் நாட்டமாய் உருப்பெற்று எழுகின்றன. நினைவுநிலை 1, 2, 3, 4, 5, என்ற எண்ணுள்ள எண்ணங்களோடு விளங்கினால், 1, 2, என்ற பழைய நினைவுகள் சிறிது கழிந்ததும் மறைகின்றன; 6, 7, என்றஎண்ணங்கள் எதிரதன்நாட்டமாகவந்துபுகுந்து நிரப்புகின்றன. 1, 2, 3, 4, 5, என்று நின்ற நனவு, பின்னர் 3, 4, 5, 6, 7 என்று நிற்கின்றது. இவ்வாறே முன்னையவை மறைய, பின், பின்வந்தவை சிலசில சேர்கின்றன.

நிகழ்காலம் என்று நாம் வழங்குவதுதான் யாது? அஃதொன்று இருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது. ஆனால், அதனை நாம் உணர்வதோ அருமையாகின்றது. அதைப் பிடிக்கச்சென்றால், நம் கண்ணெதிரே காற்றாய் மறைகின்றது. இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் வேறுவேறுபிரிக்கும் இந்நிகழ்காலம், வாளின் கூரிய முனைபோல் உள்ளதென நாம் நினைக்கலாம். ஆனால் சிறிது ஊன்றிப்பார்த்தால், நிகழ்வு என்பது மழுங்கிய வாளிலும் மிகமழுங்கித் தட்டையாக இருக்கக் காண்போம். ஜேம்ஸ் என்ற பெரியார், குதிரைமேல் ஏறுகின்றவர் குந்துவதற்கு அமைத்த கலணை (saddle) அகன்றதாய் முன்னும் பின்னும் வளைந்து தோன்றுவதுபோல, நிகழ்காலமும், காலவளவுள்ளதாய், இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் நோக்கி நிற்கின்றது என்று எடுத்து விளக்குகின்றார். நிகழ்வு என்பதில் கழிந்ததன் நினைவும், எதிர்வதன் நாட்டமும் உண்டன்றோ? நினைவையும் புலனையும் நாட்டத்தையும் வெவ்வேறே, தனித்தனியாக நாம் உணர்வதில்லை. இம்மூன்றையும் ஒன்றாக இயையவைத்தே நாம் உணர்கின்றோம். இம்மூன்றும் ஒன்றாய்க்கலந்து ஒருருப்பெற்று விளங்குவதனையே நிகழ்காலம் என வழங்குகின்றோம்.

இந் நிகழ்காலம் ஓர் குறித்த அளவுள்ளதாகவே காணப்படுகின்றது. அவ்வளவினைக் காலத்தனியன் (Unit of Time) என வழங்கலாம். காலத்தனியன் மிகச்சிறிய அளவினதாகக் காணப்படுகின்றது. இடவுணர்வுக்கும் காலவுணர்வுக்கும் உள்ள வேற்றுமை இங்குப் புலனாகிறது. திருக்கழுக்குன்ற மலை மேலேறிக் கீழ்ப்பார்க்கின்றேன். பலநாழிகை தொலைவுள்ள வயல்களுங் ஊர்களும் தோப்புக்களும் துறவுகளும் என் கண்ணுக்குப் புலனாகின்றன. ஆனால் அவ்வாறு காலத்தைப்பற்றி எண்ணமுடியுமோ? கையைத் தட்டியோ, தலையை ஆட்டியோ, 'ஊம் ஊம்' என்று ஊங் கொட்டியோ, ஒவ்வோர் இமையையும் கூட்டி எண்ணவேண்டியிருக்கின்றது. எனவே காலஉணர்வு இடவுணர்வுபோலாது மிகமிகச் சிறிய அளவுடையதாகும். காலவுணர்வுக்குச் செவிப்புலன் உதவியாகின்றது. ஒலிகளைக் கொண்டே காலத்தை அளக்கின்றோம். கைதட்டியபோதும், ஒலியையே கேட்கின்றோம்; வாளாநின்றபோது நம்முடைய குருதிசரலின் துடிப்பையேனும் கேட்டெண்ணுகிறோம். இவ்வாறு எண்ணிவரும்போது சிறிதளவு எண்ணியதும் எல்லாம் குழம்பிப் போகின்றது. தொடர்ச்சியாகப் பல ஒலிகள் எழும்போது அவற்றைப் பலமுறையிலும் நிரைநிரையாக, வகுத்து இயைபுபடுத்த முயல்கின்றோம். சீர்களாகவும் அடிகளாலும் பாக்களாகவும் செய்யுள் ஒலியைப் பார்க்கின்றோம். இசைப்பொருத்தம் உள்ளனவாக ஒலிகளைப் பிரித்தபோது, தனிஒலிகளை எண்ணிமனதில் அமைப்பதினும், தொடர்ஒலிகளை எண்ணி மனதில் அமைப்பது எளிதாகின்றது. எழுத்தெழுத்தாகச் சொன்னால் சில எழுத்தே மனதில்நிற்கும்; அவற்றை இசைப்பொருத்தமுற இயையவைத்தால் பல தொடர்கள் மனதில் நிற்கின்றன.

காலத்தனியன் என்பது, நிகழ்காலம் என்று நாம் உணரும் பொழுதின் அளவு எனக் கண்டோம். இக்காலத்தனியனின் காலவளவுதான் என்ன? ஆளுக்கு ஆள் இந்த அளவு மாறுபடுவதனை உலகத்தில் காண்கிறோம் அன்றோ? இக்காலத்தனியனின் பேரளவெல்லை 12 இமைப்போதாக இருக்கின்றதென ஆராய்ச்சிவாணர் செய்க்காட்சியால் (Experiment) கண்டுள்ளார்கள். அதன் சிற்றளவெல்லை ஓரிமைப்போதில் ஐந்நூறில் ஒரு கூறாக ($\frac{1}{500}$ இமை) குறுகியுள்ளது. 12 இமைப்போதிற்கு மேற்பட்ட பொழுதினை நிகழ்காலமாக உணர்வது இயலாது. $\frac{1}{500}$ இமைப்போதிற்கும் குறைந்த பொழுதைத் தனிக்காலமாகப் பிரித்தறியவும் இயலாது. இவ்வாறு காலவளவையுணர்வது ஒன்று, ஒரு கால அளவினைவிட மற்றொரு காலவளவு நீண்டதா குறுகியதா என்று அறிவது மற்றொன்று. ஒரு காலவளவுக்கும், மற்றொரு காலவளவுக்கும் எவ்வளவு வேற்றுமையிருந்தால் அவை வேறுவேறாகத் தோன்றுகின்றன? ஒருமரத்துண்டின் நீளத்தினும்மற்றொரு மரத்துண்டு மயிரிழையளவு நீண்டிருந்தால் அவ் வேற்றுமையை உணரமுடியாதிருப்பது போல, ஒரு காலவளவும் மற்றொரு காலவளவும் மிக நுட்பமாக வேற்றுமைப்படிருந்தால் அதனை உணர்வது இயலாதாம். ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள வேற்றுமை நூறில் ஒரு கூறாகவேனும் இருந்தாலன்றிச் சிறிய காலவளவைகளுக்குள்ள வேற்றுமை புலனாவதில்லை. காலவளவை பெரியதாக இருக்குமானால், இடையுள்ள வேற்றுமையும் மிகுதல் வேண்டும். கழிநெடிலடியின் பின்னர் வரும் நெடிலடியும் குறுகியதாகத் தோன்றுகிறது. அதுபோலப் பெரியகாலவளவைக்குப் பின்னே வரும் காலவளவை மிகமிகச் சிறிதாகவும், சிறியகாலவளவைக்குப் பின்வரும் காலவளவை மிகப் பெரிதாகவும் தோன்றுகின்றன.

இரண்டிமைப்போது கையைத் தட்டிக்கொண்டிருக்கிறேன். இரண்டு இமைப்போது வாளா கிடக்கின்றேன். இவ்விரண்டுபோதும் ஒரே யளவினதாக இருந்தாலும், கைதட்டிய பொழுது வாளா இருந்த பொழுதைவிட நீண்டது போலத் தோன்றுகின்றது. இயங்குகாலம் வெறுங்காலத்தைவிடப் பெரிதாகத் தோன்றுகிறது. இது சிறிய காலவளவைக் குறித்தது.

விருப்புடன் கழிகின்ற காலம் விரைந்து ஓடுகிறது. நண்பர்களோடு அளவளாவி யிருக்கும்போது ஒரு மணிப்போதும் ஓரிமைப்போதாக ஓடுகிறதன்றோ! வருத்தத்துடனும், மனத்துயரத்தோடும், கழிகின்ற காலம், நீண்டு மெள்ளமெள்ளச் செல்கின்றது. குடத்தை உடைத்துவிட்ட சிறுமி தன் தாய்க்கு எதிர்போக அஞ்சி நிற்கும் நிலையில், ஒவ்வோர் இமைப்போதும் ஒருநாளாக நீள்கின்றது. விருப்பமாய்க் காலம் கழியும்போது மற்றொன்றையும் நோக்காமல் கண்ணும் கருத்துமாய் விரும்பிய செயலில் ஒன்றாய் இயைந்து விடுவதால் காலம் போவதை உணர்வதில்லை. நம் செயல் வருத்தத்தாலோ, அச்சத்தாலோ தடைபட்டபோது வேறொன்றிலும் கருத்தாயிருக்க இயலாது காலப்போக்கைக் காண்பதிலேயே கருத்தாக இருக்கிறோம். சில நாள்கள் சென்றபிறகு விருப்புடன் கழித்த காலத்தையும் வெறுப்புடன் கழித்த காலத்தையும் நினைவிற்குக் கொண்டுவருவோமானால் குறுகிக் கழிந்த இன்பப் போது நீண்டு தோன்றுகிறது; நீண்டு கழிந்த துன்பப்போது குறுகித் தோன்றுகிறது. இன்பப்போதில் கருத்தாய்க் கண்ட பொருள்கள் பலவும் ஒன்றின்பின் ஒன்றாக நினைவிற்கு வருவதால் அவ்வின்பப்போது நினைவில் நீண்டுதோன்றுகிறது. துன்பப்போதில் கருத்தாய்க் கண்டபொருள் ஒன்றுமே யில்லையாதலின், ஒரு பொருளும் நினைவிற்கு வருவதில்லை: எனவே, அத் துன்பப்போதின் நினைவு குறுகியே தோன்றுகின்றது.

யாப்பிலக்கணம்

188919

தொடை—முரண்.

[392-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்நடையினைச் சுவைசெய்யும் பொருட்டு வருகின்ற, மோனை எதுகை முரண் அளபெடை இயைபு என்னும் ஐவகைத் தொடைகளில், எழுத்துக்கள் ஒத்து ஒலிப்பதால் நயம் பயக்கின்ற மோனை எதுகைத் தொடைகளின் தன்மையை முன்னர்க் கண்டோம். இனி முரண்தொடையின் இலக்கணத்தைக் கருதுவோம்.

முரண்தொடை யென்பது எழுத்தைத் தழுவியதன்று; இதன் சுவைக்கு ஆதாரம், ஒற்றுமையுமன்று. இவ்விரண்டிற்கும் எதிராயது முரண். சொல்லும் பொருளும் மாறுபடத் தொடுப்பது முரண் தொடையாகும்.

> உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு.

இதனில்,முதலடியின் முதலிலுள்ள 'உறங்குவது' என்பதற்கு எதிராய் 'விழிப்பது' என்பது இரண்டாம் அடியின் முதலில் வந்திருக்கின்றது. இவை ஒன்றற்கொன்று மாறானவை. உறங்குவது, விழிப்பது, என்பதில் எதுகை இயில்லை. அது முரண் தொடை.

மோனையும் எதுகையும் போல், முரண்தொடை முன்காட்டிய உதாரணத்தின்படி, வேறுவேறு அடிகளின் முதற் சீர்களிலும் வரலாம், அல்லது ஒரு அடியிலுள்ள வேறுவேறு சீர்களிலும் அமையலாம்.

> சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
> சுற்றமாச் சூழ்ந்து விடும்.

இதனில், பெருமை - சிறுமை என்பவை மாறுபட முரணி ஒரே அடியின்கண் நிற்பது காண்க.

இவ்வாறு முரண்பட வருவன பலதிறப்படலாம். ஒன்றற்கொன்று, நோய் - மருந்து என்பனபோல் நேர்ப் பகையாகஇருப்பன மாத்திரமேயன்றி,இம்மை-மறுமை, காலை - மாலை, தலை - கால், வடக்கு - தெற்கு, என்பனபோல் ஒன்றன் இருபுற எல்லைகளும் முரண்களேயாகும். இதுவுமன்றி, கருமை - செம்மை,

விண் - மண், என்பனபோல், நிறம் பூதம் போன்ற ஒரே இனத்தைச் சேர்ந்தவை ஒன்றற்கொன்றுமுரண்களாக அமைவதுங் கூடும்.

கருங்குழலார் சேங்கையினல் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ...........

என்னும் நளவெண்பா வடியில், கருமை செம்மை பசுமை வெண்மை என்னும் நான்கு நிறங்கள் ஒன்றற்கொன்று முரணு யமைந்தன. இதனில், பகையொன்றுமில்லை, ஒன்றையொன்று அழிக்கவில்லை. வேறு வேருன இந்நிறங்கள் ஒரு சித்திரத்தில் அமையும்படி வைத்தவகையிலும் முரண்தொடை யாயின.

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில், என்னு மிவ்வறுவகையிலும் ஒன்றற்கொன்று மாருய் நிற்பன முரண்களாகும்:—

1. அமுதம் - நஞ்சு; தீ - நீர்;—பொருள்.
2. சுவர்க்கம் - நரகம்; மேல் - கீழ்; வலம் - இடம்—இடம்.
3. காலை - மாலை; பகல் - இரவு —காலம்.
4. தலை - கால்; மார்பு - முதுகு—சினை.
5. நன்மை - தீமை; பெருமை-சிறுமை;-குணம்
6. காத்தல் - அழித்தல்; புகழ்தல்-இகழ்தல்—தொழில்.

சிற்சில சமயங்களில் அர்த்தசம்பந்த மில்லாமல், சொல்லளவில் மாத்திரம் முரண் தோன்றிநிற்பதுங் கூடும். உதாரணமாக,

சேஞ்சொற் கேளா வெள்ளை மதியினர்

என்னுங்கால், செம்மை-வெண்மை, என்னும் இவை இரண்டும் முரணுகின்றன. எனினும், செஞ்சொல், என்பதில் உள்ள செம்மை என்பது சிவந்த நிறத்தையேனும், வெள்ளைமதி என்பதில் உள்ள வெள்ளை என்பது வெண்மை நிறத்தையேனும் இங்குக் காட்டவில்லை. செஞ்சொல், என்பது நேர்மை; வெள்ளைமதி என்பது பேதைமை. ஆதலால் அவை இரண்டும் அர்த்தத்தால் முரணுவதின்றி, செம்மை—வெள்ளை என்ற சொல்லளவில் மட்டுமே, முரணுடையதாய் அமைகின்றன.

இனிச் சொல்லளவில் யாதும் முரண் இலதேனும், பொருளைக் கொண்டு நோக்குமிடத்து முரண் இருப்பது புலப்படும். உதாரணமாக,

யானைப் படையைப் பூனைவென் றன்ன

என்னுங்கால், யானைக்கும் பூனைக்கும் சொல்லளவில் முரணில்லையாயினும், பெரிய யானையைச் சிறிய பூனை வென்றது, என்னும் முரணுடையபொருள் அதனுள் அடங்கியிருக்கின்றது.

இனி, சொல் பொருள் இரண்டும் ஒக்க முரண்பட்டு வருதலுங்கூடும். உதாரணமாக,

நன்றுந் தீதும் பிறர்தர வாரா

என்றக்கால், நன்று—தீது, என்னுமிவை சொல்லளவில் எதிர்ப்பதங்களாவது மன்றி, பொருளாலும் ஒன்றற் கொன்று முரணுடையவைகளாய் நிற்கின்றன.

முரண்தொடை யாவதற்கு மாறுபட நிற்கவேண்டுமென்பது மிகவும் அவசியம். கால்—தலை என்பன எதிர்ப்பதங்களாகலாம் எனினும், அவை மாறுபட நிற்கும்போது மாத்திரந்தான் முரணுகும். மனிதருக்குக் காலும் தலையும் உள, என்பதில் யாதும் முரணில்லை. இதனையே, "காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வான்" என்னும்பொழுது, ஒன்றற்கொன்று மாறுபட நிற்றலால் முரண்தொடையாகின்றது.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். (குறள்)

அழிவது--ஆவது என்னும் எதிர்ச்சொற்கள் மாறுபடநின்று முரண்தொடையாகின்றன.

இன்பத்துள் இன்பம்விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்...... (குறள்.)

இதனில் இன்பம்—துன்பம், முரண்பட நின்றன.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள்)

இதனில், இனிய—இன்னாத, கனி—காய், என்பன மாறுபட நின்று முரணுகின்றன. இக்குறளில், மோனை எதுகை முரண், ஆகிய மூன்று தொடைகள் அமைந்திருத்தல் காண்க. அதனால், அச்செய்யுளின் நயம் மிகுந்து அதன் பொருளின் உறுதி படிப்போர் மனதில் தங்குவது எளியதாகின்றது.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும் (நல்வழி)

இதனில், அபாயம்—உபாயம், விதி—மதி, என்பன மாறுபடும் பொருள் விளைத்துநின்று முரணுகின்றன. முரணுய் வருகின்ற சொற்களே எதுகையாகவும் அமைகின்ற நயமுங் காண்க.

குறிப்பு:—சிவாய - கபாய, என்பதில் இரண்டாமெழுத்தின் அளவொத்த உயிரினல் எதுகை அமைகின்றது. மற்றபடி வாவும் பாவும்- வருக்கமும் அன்று, இனமும் அன்று.

செய்யுள்நடையின் உறுப்புக்களில் ஒன்ருகிய இம் முரண்தொடைக்கும் அணிகளில் ஒன்ருகிய விரோத அணிக்கும் வேற்றுமை இல்லை யென்று பெரும்பாலுங் கருதப்படுகின்றது. எனினும் சற்று உற்று நோக்கினுல் அவை யிரண்டிற்கும் ஒற்றுமையில்லாமையே அதிகம் புலப்படும். சொல்மட்டுமேனும் பொருள்மட்டுமேனும் சொல்லும் பொருளுஞ் சேர்ந்தேனும் மாறுபட்டு நிற்பது முரண் தொடையாகும் என முன்னர்க் கூறினேம்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்

பெருமை - சிறுமை என்னும் எதிர்த்திறச் சொற்கள் இரண்டு அவ்வடியில் நிற்கின்றன வென்பதன்றி அவ்விரண்டிற்கும் நேரான தொடர்பு ஒன்றுமில்லை. இது முரண்தொடை.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்.

என்ற விடத்தும், பல - சில, என்னும் எதிர்ப்பதங்கள் தத்தம் பொருளைத் தழுவித் தனித்து நிற்கின்றன. இதுவும் முரண்தொடை. முன்,

கருங்குழலார் செங்கையினல் வெண்கவரி பைங்கால்
மருங்குலவ.........

என்று காட்டிய நளவெண்பாச் செய்யுளடியினும், கருமை, செம்மை, பசுமை ஆகிய முரண்மொழிகள் அவ்வவைகளுக்குரிய பொருள்களைமட்டுமே தனித்தனி சார்ந்து நிற்கின்றனவேயன்றி, இவையனைத்தும் ஒரே விடயத்தின் அங்கங்களாக அமைந்தில. இப்பொழுது, நளவெண்பாவிலிருந்தே வேருெரு செய்யுள் எடுத்துக்கொள்வோம்:—

கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெறிப்ப—நூலென்னத்
தோன்ருத நுண்மருங்குல் தோன்றச் சுரிகுழலாள்
ஈன்ருள் குழவி யிரண்டு (கலிதொடர் 30)

இதனில் வெண்மை - கருமை - நீலம்; தோன்ருத தோன்ற, என்னும் முரண்சொற்கள் தத்தமக்குரிய பொருள்களைத் தழுவியிருப்பதுமன்றி, மாறுபட நிற்கின்ற இவையனைத்தும், தமயந்தி கருக்கொண்டாள் என்னும் ஒரேகருத்தின் அங்கங்களாய் இறுதியில் ஒற்றுமையடைகின்றன. இது விரோத அணி விரோதமாய்த்தோன்றுகின்ற சொற்கள் யாதேனும் ஓர் வகையில் ஒற்றுமை அடையவேண்டுமென்பது விரோதஅணியின் இன்றியமையாத இலக்கணம். கரிய கூந்தலையுடைய மாதர் தம் சிவந்த கையினல் வீசும் வெண்மையான கவரியினின்று வருகின்ற பசுமையான காற்று—பக்கத்தில் உலவ வீமராஜன் சென்ருன், என்னுமிடத்து, கருமை செம்மை வெண்மை, என்பன கூந்தல் கை கவரிகளுக்கு முறையே அடைமொழிகள் ஆவதல்லாமல் காற்றின் அங்கங்கள் ஆகா.

சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
ஆலு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலங்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்.

[சோலையில் சஞ்சரிக்கும் குயில்கள் தம் மழலைச்சொற்களை மிழற்ருமல், அடங்கிக்கிடக்க, ஆடுகின்ற மயிற்கூட்டங்கள் ஆரவாரஞ்செய்து எழுந்தன. பூமி குளிர்ந்தது. மேகம் கறுத்தது. இந்திரகோபம் என்னும் பூச்சிகள் சிவந்தன. காதலர்களை விட்டுப் பிரிந்திருப்பவர்களுடைய உடம்பு வெளுத்தது - கார்காலம் வந்தபோது]

இதனில், அடங்கல் - எழுதல், கறுத்தல் - சிவத்தல் - வெளுத்தல், ஆகிய முரண்களெல்லாம் இறுதியில் கார்காலச் செய்தியின் தன்மைகளென்ன ஒற்றுமைப்பட்டு முடிவதுகாண்க.

காலையு மாலையுங் கைகூப்பிக் கால்தொழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக் [தார்ப்
கருமான்ருேல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்
பெருமானைச் சிற்றம் பலத்து.

[அழகிய கரிய யானைத்தோலையும், வெண்மையான விபூதியையும் சிவந்த மேனியையும் பசுமையான மாலையையும் உடைய சிவபெருமானைச் சிதம்பரத்தில், நாம் காலையும் மாலையும் கைகூப்பி அவர்காலைத் தொழுதால், முன்சென்ம வினைகளெல்லாம் கீழாகிவிடும்]

இதனிலும், காலை—மாலை, என்பன தொழுவதிலும்,மேல்கீழ் என்பன ஆவதிலும், கருமை-வெண்மை-செம்மை - பசுமை, என்பன பெருமானிலும் ஒற்றுமைப்பட்டு முடிவதால் விரோத அணி.

ஆதலின், விரோத அணிக்கு உதவியாக முரணுடைய சொற்கள் வரலாம். மற்று, முரணுடைய சொற்கள் வருவதெல்லாம் விரோத அணி ஆகாது முரணேடு சொற்கள் நிற்குமாயின் அதனை முரண்தொடை எனவும், அம்முரணிற்கு ஓர் ஒற்றுமை அமைதியுந் தோன்றுமாயின் அதனை விரோத அணியென்றுங் கொள்ளல்வேண்டும்.

வடநூலார் விரோதாலங்காரம் என்பதினும், விரோதாபாஸாலங்காரம் என்னும் பெயரையே சிறப்பாகக் கொண்டனர். இவ்வணியைத் தமிழில் முரண்விளைந்தழிவணி என வழங்குவதுண்டு. விரோதாபாஸாலங்காரம் என்பதற்கு, "விரோதமாகத்தோன்றுவதை அன்றென்று விளக்கிக்காட்டும் அலங்காரம்" என்று பொருள். முன்னுரைத்த இரண்டு உதாரணங்களிலும், முரண்பட நின்ற சொற்களெல்லாம், இறுதியில் ஒரு கருத்தினுள் ஒற்றுமைப்பட அடங்குவதால் தோன்றிய விரோதம் அன்றெனு ஆயிற்று. எனினும் அவ்விரோதம் தோன்றுதற்கு,நேர்எதிரானசொற்கள் நிற்கவேண்டும் என்ற நியதியில்லை. இயற்கைக்கு மாருய ஒன்று உரைக்கப்பெற்ருலும், தர்க்கத்திற்கு மாருக ஒன்றை உரைத்தாலும் அது விரோதமே. "பாம்பை எலி விழுங்கியது" என்றக்கால் இயற்கைக்கு மாருய விரோதம்; "இந்தப் பிள்ளையின் தாய் மலடி" என்றக்கால் தர்க்கத்திற்கு மாருய விரோதம். இதனேடு நின்றுவிட்டால் அதனில்யாதும் அணியில்லை. பொருளலவில் முரண்தொடை இவையென ஒருவாறு கூறுவதெனின் கூறலாம். விரோத அணி ஆகவேண்டுமானல், இப்படி மாறுபட நிற்பவை எவ்வகையிலேனும் இயற்கையாம்படி அமையவேண்டும். இவ்வமைதியை கருத்தின் அரிய இரகசியத்தினலேனும், சிலேடையின் உதவியினலேனும் உண்டாக்க இயலும்.

கோபாலன் தாள்குறுகிக் கும்பிட்டா லம்மாவோ
தாய்ப்பாலுந் தாரா விடும்.

என்னுங்கால், பசுக்களையுடைய கிருஷ்ணனை வணங்கினல்,பசும்பால் நமக்கவன் கொடுக்காமல் நம்முடைய தாயின் பாலும் நமக்கு வாய்க்காமற் போய்விடும் என்றதில், கோபாலன் - தாய்ப்பாலும் மறுப்பதென்னும் விரோதம்தோன்றுகின்றது.முரணுடைய சொல்லொன்றும் இதன்கண் இல்லை. மற்று அம்முரண் அழிவதெங்ஙனம் எனின், தாய்ப்பால் என்பது இங்கு மறுபிறப்பைக் குறிக்கின்றதென்பதை நாம் உணர்ந்தவுடன் புலப்படும். கிருஷ்ணனைத்தொழுதால் மறுஜென்மமில்லை என்பது உண்மை. புகழாப் புகழ்ச்சியாய் நிற்கின்ற இச்செய்யுளினுள் தோன்றிய விரோதம் கருத்தின் இரகசியத்தால் இயற்கையாக விளங்குவது காண்க. இவ்வாறு கருத்தின் பெருமையால்,விரோதம் அமைதியாவது அருமை. பெரும்பான்மை சிலேடையின் உதவியாலே அவ்விரோதம் அவியவேண்டிய தாயிருக்கின்றது. உதாரணமாக,

கொங்கை யேந்திய வாண்களு மவண கொம்புடைய
துங்க வேங்கையின் குலமெலா மவண பால்சுரந்து
பொங்கு நீடுசே வினங்களு மவண வான்புனலை
அங்கண் வேட்டுணு மொற்றைத் தாளெகினமுமவண
(காஞ்சிப் புராணம்)

இதனில், முலைகளுடைய ஆண்கள், கொம்புடைய வேங்கை, பால்சுரக்கும் சே, நீருண்ணும் ஒற்றைக் கால் எகினம், என்பன இயற்கைக்கு விரோதமான வாக்கங்களாம். ஆனல், ஆண், வேங்கை, சே, எகினம், என்பவை முறையே. ஆண் இனம், புலி, எருது அன்னம், என்ற பொருளுடையவைகளன்றி ஒவ்வொன்றும் ஒவ்வோர்வித மரத்திற்கும் பெயராகுமென்பது அறிந்தால், (கொங்கை ஏந்திய ஆண் = வாசனை தாங்கிய ஆண் என்னும் மரம், என்ருவது போல்) அச்சிலேடையால் விரோதம் மறைவது புலப்படும்.

இதனின்று, முரண்தொடையும் விரோத அணியும் முற்றிலும் வேறு வேருவது வெளிப்படை,

"மாறுபடு சொற்பொருள் மாறுபாட் டியற்கை
விளைவுதர வுரைப்பது விரோத மாகும்"

என்று விரோத அணியின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் கூறும். சொல்லும் பொருளும் தோன்றும் மாறுபாட்டிற்கு அமைதி உண்டாகும்படி உரைப்பது விரோத அணியாகும், என்பது அதன் பொருள்.

முரண் தொடையின் இலக்கணத்தை,

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"

என்று கூறுந் தொல்காப்பியம். அம்முரணிற்கு அமைதி சேரவேண்டுமென்று இங்குக் கூறுதிருப்பதும் அங்குக்கூறியிருப்பதும் இவ்விரண்டிற்கு முள்ள வேற்றுமையை விளக்குகின்றன.

ஜோனதன் ஸ்விப்ட்

இயற்றிய

விளக்குமாறு—விளக்கும் ஆறு.

(" Meditations on a broom-stick" by Jonathan Swift)

[ஜோனதன் ஸ்விப்ட் என்பவர் 17-வது நூற்றாண்டின் இடைக்காலமிருந்த சிறந்த ஆங்கில ஆசிரியர்களில் ஒருவராவார். அவர் டப்ளினில் 1667-ம் வருடம் நவம்பர் மாதம் 30-ந்தேதி பிறந்தவர். எளிமையுற்ற குடும்பத்தில் பிறந்தவராதலால் இளமைப்பருவத்தில் அவரை உழக்கிய அல்லல்கள் பல. அவரது கல்வியின் ஆற்றலாலும், கலைநுனிக்கும் திறத்தினாலும், நகைச்சுவை அவர் நூலினொடு இழைகின்ற செவ்வியாலும், தனக்குரிய மிகவுயர்ந்த ஓர் இடத்தை இலக்கியஉலகில் பெற்றார்.

ஸ்விப்ட், லண்டன்நகரில் தங்கநேர்ந்த ஒரு சமயம் லார்ட் பர்க்கிலி என்னும் பிரபுவின் குடும்பத்து மதபோதகராயமர்ந்து, அவ்வம்மையாருக்குத் தினந்தோறும் அரிய நூல்களைப் படித்துச் சொல்வதும், போதிப்பதுமாக விருந்தார். அச்சீமாட்டிக்கு ராபர்ட் பாயில் என்னும் ஆசிரியர் செய்துள "சிந்தனையில் மலர்ந்த கருத்துக்கள்" என்னும் நூலைப் படிப்பதில் அவா வதிகம். அவ்வம்மையின் விருப்பப்படி ஸ்விப்ட் அந்த நூலைப் படித்துச் சொல்லிவந்தார். எனினும் இந்நூலின்பால் ஸ்விப்டிற்கு அதிகம் மதிப்பில்லை. ஆதலின் தன்விருப்பம் செல்லாத அப்புத்தகத்தைப் படித்துவராமல் தப்புதற்கு ஒரு சூழ்ச்சி செய்யவேண்டியது அவசியமாயிற்று. அது கோபம் விளைக்காமல் வேடிக்கையில் முடிவதாக இருத்தலும் வேண்டும். ஒன்று தோன்றியது. மறுநாள் பாயிலின் நூலைப் படித்துவிட்டுப் பின், அதை ஒருவருமறியாமல் ஒளித்துச்சென்று, " விளக்குமாறு தூண்டிய சிந்தனைகள்" என்று ஒரு கட்டுரை தானேவரைந்து அப்புத்தகத்தில் நுழைத்துப் பின், அதனை மறுபடியும் இருந்தவிடத்தில் வைத்துவிட்டார். மறுதினம் அச்சீமாட்டிக்கு வழக்கப்படி படிக்கப் புகுந்தபோது இவர் நுழைத்துள பக்கத்தைத் திருப்பி, எப்பொழுதும்போல் அன்றைய சிந்தனையின் தலைப்பை "விளக்குமாறு தூண்டிய சிந்தனைகள்" என்று எடுத்துச் சொன்னார். இத்தலைப்பு அச்சீமாட்டிக்கு வியப்பையே தந்தது. எனினும், " இந்த அற்பப் பொருளினின்று எத்துணைப் பெரிய தத்துவத்தை அவ்வித்தகன் வெளியாக்கி யிருக்கின்றானோ—யார் அறிவர்? படி, பார்க்கலாம் ' என்றனள். தனது கரவு வெளியாகாவண்ணம் காக்குமாறு அமர்ந்து, வழக்கம்போல் மிக்க கவனத்துடன் ஸ்விப்ட் படிக்கலானார். இப்புலவன் செய்த துடைப்பச் சதியையறியா அப்பேதைமாது இக்கட்டுரையாற்கவரலாகி, இடையிடையே, கட்டுரையின் பெருமையையும், கட்டுரையாளனது பொதுவறத் திகழும் திறமையையும் புகழலானாள். சீமாட்டியின் புகழுரை இவ்விளையாட்டை விளைத்துவைத்த புலவனுக்கு உள்ளுக்குள் உவகை விளைத்ததெனினும், தன் சூழ்ச்சி வெளியாகாவண்ணம் காத்துக்கொண்டான். சூழ்ச்சியறியா அப்பேதையும், மகிழ்ந்தவளா யிருந்தாள்.

இச்சமயம் நண்பர் சிலர் அச்சீமாட்டி அறைக்குள் வர, இக்கள்ளப் புலவன், வேறு வேலை தனக்குளதென விளம்பி மிக விரைந்து வெளியேறினன். வந்தவர்களிடம், "பாயிலின் சிந்தனையில் மலர்ந்த கருத்துக்கள்' என்னும் நூலில், விளக்குமாறு தூண்டிய சிந்தனைகள் என்பதை ஸ்விப்ட் என்பான் இப்பொழுது படிக்கக் கேட்டேன். என்ன தெய்வக்கருத்து, என்ன நயம்" என்று கூறி மகிழ்ந்தாள். இத்தகைய தலைப்புடைய கட்டுரையைத் நாங்கள் இதுவரை கேட்டதில்லையே" என்றனர் வந்தவர். " ஏன் வியக்கின்றீர்கள். அதோ புத்தகம் இருக்கின்றது. படித்துப்பாருங்கள்" என்றாள் அம்மாது. ஒருவர் திறந்தார். ஸ்விப்ட்டினுடைய கையெழுத்திலிருந்த அந்த இதழைக்கண்டு எல்லாரும் சிரித்தனர். சீமாட்டியோ வியப்புற்றாள் எனினும் பிறகு தந்திரத்தை அறிந்து அவளும் சிரித்து இவ்விளையாட்டை உவந்து அனுபவித்தாள். 'அவன் என்னை வஞ்சித்து விட்டான், எனினும் அதுதான் அவன் வழி' என்று நகையுடன் கூறினாள். மனம் நோகாவகை இவ்விளையாட்டு முடிய, பாயில் நூலை ஸ்விப்ட் படிப்பதும் அன்றோடு முடியலாயிற்று கீழ்வரும் கட்டுரையின் வரலாறு இது] " ஆசிரியர்"

பெண்ணே, உன்னால் புறக்கணிக்கப்பெற்று இம் மூலையில்கிடக்கும் இத்துடைப்பக்குச்சிகள் மரச்செறிவுடையகாட்டில் இயற்கைவளத்துடனும், இலைகளுடனும்,கிளைகளுடனும் விளைந்தவை. அக்குச்சிகளின்நிலை இப்பொழுது யாது. கைவேலைத்திறமையால் அச்செடியின் இயற்கைகெட்டு உயிரற்றவோர் கயிற்றினால் தன் வளநிறைவெல்லாம்போய்க் கட்டுண்டு கிடக்கின்றது. செடியாயிருந்த அது இப்பொழுது எதிர்மாறாய், அடிமேலும் தலைகீழுமாய், அதன்நிலை கவிழலாயிற்றே! குற்றேவல்செய்யவேபிறந்த கீழ்மக்களே எடுத்தாண்டு வீட்டையும் வாயிலையும் சுத்தம்செய்யவும் குப்பை கூளங்களுடன் மூலையையே தனது இருப்பிடமாகக் கொள்ளவும்நேர்ந்தது அதன்விதி. மனிதனது கைத்திறமை செய்துவைப்பது இன்னபடி மரபின்தொன்மையையும் இயற்கைநிலையையும் குலைப்பதல்லால் வேறு என்? இப்படிச் சுத்தம்செய்யும் வேலையில் ஈடுபட்டுத் தேய்வுற்ற துடைப்பத்தைக் குப்பைக்குழிக்கு அர்ப்பணம் செய்துவிடுகின்றோம். அல்லது அடுப்புமூட்டுகின்றதற்கு எரிதுரும்பாக முடிகின்றது. அதன் சரித்திரம் இதனை நினைக்குங்கால், "மனிதனும் ஒருதுடைப்பக் குச்சியே" என்றுன்னுகின்றதென்னுள்ளம்.

இயற்கைத்தேவியோ, மனிதனை எல்லா நலத்துடனும் வளத்துடனும் அமைத்து உலகத்திற்கு அளித்தாள். புத்திக்கு இருப்பிடமாகும் தலையை அழகிய குழலால் நிறைத்தாள். பின், கள் காமம் ஆதிய தீயபழக்கங்களில் அவன் விரைந்து விழ, குழல்செறிந்த தலை, இலையற்ற மரம்போல் வழுக்கையாக, கழித்ததைக் கொண்டு கையாற் செய்த செயற்கை மயிர் சூடி மனிதன் மதர்க்கின்றான் இந்நிலையில் இருக்கும் செயற்கை மனிதன், தன்னைப்போலவே செயற்கையால் சிதைந்த துடைப்பக்குச்சிகள் தன்மேற் பட நேருமாயின், அதன் அழுக்கையும் குப்பையையும் கண்டு வெறுப்பான். தன்னிலை யறியாமல் எங்கும் கடமாட்டமேயில்லாது வருகின்றதே இத்துடைப்பம், என்று கடிவான். மனிதனோ எப்பொழுதும் பக்ஷபாத முடையவன். தனது சீர்கெட்ட நிலைமையைத் தேர்ந்துகொள்

ளானுப் மற்றப் பொருள்களின் குற்றமே காணும் குணம் பெரிதுடையவன் மனிதன்.

ஒரு துடைப்பக் குச்சியைப்பற்றி, இதுவொரு செடியின் அடையாளமாக விருக்கின்றது என்றாவது சொல்லலாமே. அச்செடி, தலைகீழாக இருப்பினும், செடியேதான். மற்று மனிதனது நிலையோ யாதென்று சிறிது பார்ப்போம். இவன் நிலையும் தலைகீழ்தான். இவனது புத்தியோ மிருகத்தன்மையைப் பற்றி யிருக்கின்றது. கால் மேலும் தலை கீழுமாகச் சுழல்வருகின்றான். இவ்வளவு இழிந்துகிடக்கு மிவன் தன்நிலை தெரியாது உலகச் சீர்திருத்தமுயற்சியில் முனைகின்றான். தீமைகளைத் திருத்துகின்றானும்; வறுமையை விலக்குகின்றானும்; துக்கத்தைத் துடைக்கின்றானும் பாவம், இவன் சொல்வது ஆனல் அவன் செய்து முடிப்பதுதான் என்னவோ? இல்லாதனவற்றை யெல்லாம் இருப்பனபோல் கிளப்பிவிட்டு மாந்தரைக் குழப்பத்துள் ஆழஆழ வீழ்த்திவிடுகின்றான். எங்கெங்கும் புழுதியைக் கிளப்பிவிடுகின்றான். எந்தவொரு அழுக்கைநீக்கத்தான் முயல்வதாக முழங்குகின்றானோ, அவ்வழுக்கினில் தானே விழுந்துழலக் காண்கின்றோம். இந்த மனிதத்துடைப்பத்தின் சரித்திரமுடிவுதான் யாது? அந்தத்தில் மாதர்களின் அடிமையாய்க்கிடந்து வரவரக்கட்டையாய்த் தேய்ந்துதேய்ந்து முடிவினில் சந்தியில் எறியப்படுகின்றான். துடைப்பத்தின் கதியே இவன் கதியும் அன்றோ ?

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[396-வது பக்கத் தொடர்ச்சி]

கடவுட் காட்சி கம்பர்க் குளது.

ஏசாப்பெருமைக் கோசலையின் கற்பின் திறமை அவ்வாறாகத் தயரதன் மனநிலையைச் சற்றிங்குச் சோதித்தல் வேண்டும். கோசலையின் புலம்பொலி கேட்டு அவ்வயின் புக்க வசிட்டன், தயாதன் கிடந்த கொடுமையைக் கண்ணுற்று,

இறந்தா னல்ல னரச
 னிறவா தொழிவா னல்லன்
மறந்தா னுணர்வென் றன்ன
 வன்கே கயர்கோன் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத்
 துறவா தொழிவா ளிவளே
பிறந்தார் பெயருந் தன்மை
 பிறரா லறிதற் கெளிதோ

[அரசன் இறக்கவுமில்லை, எனினும் இறக்காமல் பிழைக்கப்போவதுமில்லை. ஸ்மரணை யற்றிருக்கின்றான் என்பதை எண்ணி வலிய கேகயராசனின் புதல்வியாகிய இக்கைகேசி துன்பம் யாதுங்கொள்ளாமலிருக்கின்றாள்—மற்று இக்கோசலையோ தானுற்ற துன்பத்தை ஒருபோதும் விடமாட்டாள் போன்றிருக்கின்றாள்—மனிதராய்ப்பிறந்தவர்களில், ஒரே நிலையிலிருந்தும், இவ்விதம் வேறுபடுகின்ற தன்மையை அயலாரால் அறிவது எளிதோ]

என்னா வுன்னா முனிவ
 னிடரா லழிவா டுயரஞ்
சொன்னா ளாகா ளெனமுன்
 றொழுகே கயர்கோன் மகளை
அன்னா யுரையா யரச
 னயர்வா னிலையென் னென்னத்
தன்னா னிகழ்ந்த தன்மை
 தானே தெரியச் சொன்னாள்

[என்று எண்ணி அவ்வசிட்ட முனிவன், துயரத்தால் அழிகின்ற இக்கோசலை இதன் காரணத்தைச் சொல்லமாட்டாதவளா யிருக்கின்றாள், என்று தேர்ந்து, தன்னைத் தொழுது எழும் கைகேசியைப்பார்த்து, "அம்மா, அரசன் இவ்வாறு அயர்ந்து கிடப்பதற்குக் காரணம் என்னவென்று உரை" என வினவ, அவளும், (நாக்கூசாமல்) தன்னால் விளைந்தவைகளைத்தானே தெரியச்சொன்னாள்]

உற்றதுணர்ந்த முனிவன் அரசனைத் தேற்றப்புக்கு, அழுமொரு குழவியை ஆற்றுகின்ற அன்னையைப் போல்,

கற்று யயரே லவளே
 தருநின் காதற் கரசை
எற்றே செயலின் றெழீ
 என்றென் றிரவா [illegible]

[கல்வித் தேர்ச்சியுடையவனே அயர்ந்து சோராதே. இந்தக் கைகேசி உன்காதல் புதல்வனுக்கு இராச்சியத்தைத் தானே கொடுத்துவிடுவோள். நீயும் இப்படிச் செய்யலாமா. இதனைவிடு, என்று பலமுறை வேண்டிக்கொண்டான்.]

அரசன் அயர்வு நீங்கினனல்லன். வசிட்டனும், பனிநீர் தெளித்து குளிர்ந்த காற்றுவீசி, அக்காற்றினோடு மெல்லமெல்லச் சில ஞானமொழிகளையும் அம்மன்னன் மனத்தினுள் தவழவித்து, இனிய சொற்கள் பல புகன்று பார்த்தான். இன்னமும் அரசன் நினைவுற்றெழுந்திலன். கைகேசி புகட்டிய கொடிய விஷத்தின் வேகம் இருப்பதால் தயரதனது உயிர் ஒடுங்குகின்றதேயன்றி எழுகின்றபாடில்லை. இவ்விஷத்தை மாற்றுவதற்கேற்ற மருந்து யாதெனச் சிந்தித்த வசிட்டன், " இராமன் " என்ற பெயரைச் சொன்னவளவில், தயரதனுக்கு உயிர் சற்றே வரக்கண்டான். இதனைக் கம்பர்,

ஓதக் கடனஞ் சனையா
 ளுரைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரே
 புகல்வா னுயிருங் கண்டான்

என்று கூறுவார். இது இருவழியில் பொருள்படத் தக்கது. வசிட்டன் செய்த சைத்தியோபசாரங்களாலும் ஞானோபதேசங்களாலும் மிருது வசனங்களாலும், பாற்கடலில் பிறந்த நஞ்சனைய கைகேசியின் விஷவார்த்தைகளின் கொடுமை ஒரு சிறிது அவிந்ததால், தயரதன் தன் காதல் புதல்வன் பெயரை உரைத்துக்கொண்டே மூர்ச்சனை தெளிந்தான், என்னும் பொருளும் முன்னைய பொருளிற்கு இணையாக ஏற்கத்தக்கதே. இருபொருளிலும் அவலச்சுவை ஒருபடித்தாகவே துளங்குகின்றது. உபசார உபதேசங்கள் வீணாக, இராமனுடைய பெயரை வசிட்டன் உரைத்தவளவில் தயரதன் உணர்வுபெற்றெழுவதைக் காண்பவர் கண்கள் சாலக்கலுழும். மற்று, வசிட்டன் உரைகளால் தேறிய மன்னன், இராமாவோ என்றியம்பும்வண்ணம் உணர்வுபெறக் காண்பவர் துன்பமும் ஆற்றலரிது.

இவ்வண்ணம் இருபொருள்பட வருகின்ற இடங்களிலெல்லாம் பெரும்பான்மை அவ்விரு பொருள்களும் சுவைபட ஒத்து நடக்கும்படி அமைக்கும் புணர்ப்புக் கம்பரது கவித்திறமைகளிலொன்று. கனல் [illegible] கண்ணோடும் ஞலமோங்கிய கையோடும் எதிர் [illegible] தாடகையைப் பெண்ணெனா மனத்திடை [illegible] பெருந்தகை இராமன் வெஞ்சரந் தொடுத்த[illegible]ளா விருக்கவும், கோசிகன் [illegible]

18919

சொல்லி அவனைத் தெருட்ட முயன்றதெல்லாம் பயனற்றதாக இறுதியில்,

ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தறனன் றரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினன்

என்றமைந்துளது செய்யுள். இதனில், 'ஆறி நின்ற தறனன்று' என்னுந்தொடர், 'ஆறிநின்றது அறன் நன்று' எனவும், 'ஆறிநின்றது அறன் அன்று' எனவும் பிரிந்து, 'இராமா' இந்நிலையிலும் நீ சாந்தமாயிருக்கின்ற இந்த நல்லறம் அழகியதே; ஆயினும் இவ்வரக்கியைக்கொல்'' என்று ஏவினன் என்பது. அந்நிலைக்கு எத்துணைப் பொருத்தமோ, அத்துணைப் பொருத்தம், "இராமா, இந்நிலையிலும் நீ சாந்தமாயிருப்பது அறம் ஆகாது, ஆதலால் இவ்வரக்கியைக் கொல்'' எனக் கோசிகன் ஏவினனென்பதிலும் இருக்கக் காணலாம். தெளிந்த காட்சியர்க்கு எல்லாத்திசைகளும் ஒருங்கேதென்படுமாதலின், கம்பரின் ஒரு தொடர் உண்மையின் இரு புறங்களையும் தழுவுகின்றது. இவ்வண்ணமே,

ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே
(பூக்கொய்ப்படலம்—35)

என்ற அயோத்தி மாநகர் அரிவையர்தம் அழகினை தாற்றலை விளம்பிய பாசுரத்திலும், ஊக்கம் உள்ளத்துடைய முனிவரால் காக்கலாவது காமன் கைவில்'' என்னும் வாக்கு இருதவறுகள் பொருந்தி ஏவற்றுநிற்கின்றன். முனி, வராலேயே காக்கல் ஆவது காமன் கைவில்லோ, அல்லது முனிவராலும் காக்கலா அது காமன்கைவில்லோ, என்று வினவி எப்பாற் படுவது ஏற்புடைத்து என்று ஒன்றினை விலக்கவேண்டுமென்பது இங்கு இன்றியமையாததன்று. 'முற்றுந்துறந்த முனிவர்களாலன்றிக்காமன் வில்லைக்கடக்க இயலாது' என்பதேபோல், "முற்றுந்துறந்த முனிவர்களுமன்றோ காமன் கணைக்கு இலக்காகின்றனர்'' என்னும் வாக்கும் உலக இயலில் ஒக்கநடக்கும். முன்னதாயின் அதனைப் பொய்யாக்கவும், பின்னதாயின் அதனை நிலைநிறுத்தவும், "பூக்கொய்வாள் புருவக்கடைபோதுமே'' என முடிகின்ற மேன்மை, கவித்திறத்தால் பிரபஞ்சமடங்கலும் ஒன்றாய் உணர்கின்ற கடவுட் காட்சியர்க்கல்லது வாய்க்குமோ. இங்கு, இராமனது பெயரை விசிட்டன் கூறத்தயரதன் கண்விழித்தலும், தான் தன்னின்னுயிர்ப்புதல்வன் பெயரை இயம்பவாங்கே உயிர்காணலும் இரண்டும் இவ்வவலநிலையைச் சற்றேனுங்கலைக்காமல் சித்திரத்துள் சேர்ந்திணைகின்றன.

வசிட்டமுனிவன் தனக்குரிய உயர்வினின்று தயரதனையுங் கைகேசியையும் பிள்ளைகளெனப்பாவித்து இவனைத் தேற்றுவதும் அவளைத் தூண்டுவதும் ஆகின்றான்.

காணு வையா வினிநீ
யொழிவாய் கழிபே ரவலம்
ஆணு யகனே யினிநா
டாள்வா னிடையூ றுளதோ
மாணு வுரையா டானே
தருமா மழையே யனையான்
பூணு தொழிவா னெனில்யா
முளமேக் பொன்றே லென்றான்

[தயரதன் உயிர் கண்டெழுவதை நோக்கியவசிட்டன், "ஐயனே, நீ இனி இந்தப்பெரிய துயரத்தைவிட்டொழி. புருடோத்தமனான இராமனே இனி நாடுஆள்வான். அதற்கொன்றும் இடையூறுஇல்லை. மாண்பில்லாத வார்த்தை வழங்கினாளேனும் மனத்தில் மாண்புடைய இக்கைகேசி தானே தந்துவிடுவாள். மேகம்போன்ற இராமன் மகுடஞ் சூடாமல் போவதற்கா யாம் இருக்கின்றோம்; நீ அழியாதே' என்றான்]

இவ்வுரைகேட்ட தயரதன் சிறிதளவு நம்பிக்கை எய்தினனாய் நாத்தளிர்த்து,

என்றம் முனிவன் றன்னை
நினையா வினையே னினியான்
பொன்றும் மளவில் லவனைப்
புனைமா மகுடம் புனைவித்
தொன்றும் வனமென் றன்னு
வண்ணஞ் செய்தென் னுரையுங்
குன்றும் பழிபூ ணுமற்
காவாய் கோவே யென்றான்.

[என்ற அம்முனிவரது ஆற்றல் பெருமை முதலியவைகளை நினைத்து, 'தீவினையுடையவனாகிய நான் சாகக்கிடக்கும் இவ்வேளையில், இராமனைச் சிறந்த பெரிய மகுடஞ் சூட்டி, காட்டிற்கடைவான் என்ற நினைவைநீக்கி, என் வார்த்தையும் குறைவடைந்து பழிபடாதபடி; என்தலைவனே, நீ இரட்சிப்பாயாக என்று வேண்டினான்.]

கைகேசி ஒவ்வினாலன்றித் தயரதன் கழறியபடி காத்தலரிதென ஓர்ந்த,

முனியும் முனியுஞ் செய்கைக்
கொடியாள் முகமே முன்னி
இனியுன் புதல்வற் கரசு
மேனை யோர்க்கின் னுயிரு
மனுவின் வழிநின் கணவற்
குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே
புனையாய் பொன்னே யென்றான்.

[வசிட்டமுனியும், வெறுக்கத்தகுந்த செய்கையுடைய கைகேசியின் முகத்தையே நோக்கி, "இனி, உன் புதல்வனாகிய இராமனுக்கு அரசையும், மற்றவர்க்கு அவரவர் இனிய உயிரையும், மனுவின்வழித் தோன்றலாகிய உன் கணவனுக்கு அவன் உயிரையுங் கொடுத்து, குற்றமற்ற பரிசுத்தமான புகழை நீ, பொன்னே, சூடிக்கொள்'' என்றான்]

பொன்னென்றாலுமில்லை, தங்கமென்றாலுமில்லை "நீயே கொடுத்து விடுவாயோ அல்லையோ'' என்று குழந்தையை வஞ்சித்து வாங்குவதுபோல் கைகேசியைக் கைநெகிழச் செய்யமுயன்றான் வசிட்டன், பிரிவர்த்தனையும் அவள்பாற் பயன்படவில்லை. ஆதலால்,

மொய்ம்மாண் வினைவே றவென்
றுயர்வான் மொழியா முன்னம்
விம்மா வழுவா ளரசன்
மெய்யிற் றிரிவா னென்னி
னிம்மா வுலகத் துயிரோ
டினிவாழ் வுகவே னென்சொற்
பொய்மா ணுமற் கின்றே
பொன்று தொழியே னென்றாள்.

[நெருங்கிச் சிறந்த இருவினைகளும் வேருடன் கெட அவைகளை வென்றுயர்ந்தவனாகிய வசிட்டன் அவ்வாறு மொழிவதன் முன், இவள் விம்மி அழுது, "அரசன் மெய்ம்மையிலிருந்து மாறுவானானால், இப்பெரிய உலகத்தில் நான் இனி உயிரோடிருக்க விரும்ப மாட்டேன். என் சொல் பொய்யாகாதபடி நான் இப்பொழுதே செத்துத் தீர்வேன்'' என்றாள்]

இவள் இணங்குவாளென்ற நம்பிக்கை முன்னரே இற்றிருக்க இப்பொழுது முற்றிலும் அற்றது.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
பாலிஸிஹோல்டர் நலமே எங்கள் நோக்கம்.
பிரீமியம் மிகக்குறைவு. ஒருவிதக் குற்றமும் சொல்லமுடியாத செக்கியூரிட்டிகள். கடுமையான சிக்கனம்.
இந்தியரின் திறமுடைய மேற்பார்வை.
பாலிஸிஹோல்டர் பணம் திரும்பப்பெறும் காலம் எளிதில் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் வசதி.
இந்தியாமுழுதும் கிளை ஆபீஸ்கள்
பொதுஜன ஆதரவும், முன்னேற்றமும் உடையது.
பணத்திற்கு அழிவு ஒன்றும் நேராதபடி லாபமான வழியில் இன்வெஸ்டுமெண்டுகள் செய்யப்படுவது.
எனவே
நாஷனல் இன்ஷியூரென்ஸ் முன்நிற்கின்றது.
பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை:— கஞ்சம், விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி, அனந்தபூர், கிழக்கு ஹைதராபாத் ஜில்லாக்கள் கோயமுத்தூர், நீலகிரி. விவரங்களுக்கு எழுதவும்.

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. பிராஞ்ச் செக்ரடரி.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4 சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், முயலுக்கு முயல வேண்டா, நல்லோர்சடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கக் காக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாரானார், நாணத்தால் வைவார்திறம், மால்வாலியோவின்மரபு மாய்ந்ததில்லையோ, மாண்மழிந்தபின், மண்காற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைகீழ்கணக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சுண்டெலி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தலையங்கங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், யானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்)மொழிபெயர்ப்புக்கட்டுரைகள்,மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய் பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தோல்பயிண்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.
கலாநிலயம்,வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

நோயற்ற :: :: வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள் | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

அகில இந்திய மாதர் மஹாநாட்டுப் பிரதிநிதிகள் கடந்த வாரத்திறுதியில் சிம்லாவிற்குச் சென்று கவர்னர் ஜெனரலைக்கண்டு பேசினர். அப்பொழுது பெண்களின் இயக்கவளர்ச்சியை எடுத்துக்கூறி, இந்திய மாதர்களுக்கு ஜனநாயக ஆட்சியில் அதிகப்பொறுப்பு வேண்டும் என்று கேட்டனர். இவர்கள் வேண்டுகோள் பற்றித் தாம் கவனிப்பதாக வாக்களித்து மேலும் கவர்னர் ஜெனரல் கூறியதாவது:—

" இந்தியமாதர் விரைந்து முன்னேறிவருவதுகாண மகிழ்கின்றேன். மாதர்கள் அரசியல் அதிகாரம் பெறுவது பொருத்தமுடையதென்றும், அப்படிச்செய்வதால் பயனிலாது போகாதென்றும், முன் நடந்த ரவுண்டேபில் மஹாநாட்டில் பிரதிநிதிகளாய்ச் சென்ற மிஸஸ் சுப்பிராயனும், பீகம் ஷாநவாஸூம் மிகப் பயனுடையவர்களாய் இருந்தனர். அடுத்த ரவுண்டேபில் மஹாநாட்டில் இன்னும் அதிகமான மாதர் இடம் பெறும்படி இந்திய அரசாங்கத்தார் செய்வாரென்று உறுதி கூறுகின்றேன்."

***

இன்னும் பர்மா கலகம் அடங்கவில்லை. பர்மியரும் பர்மியக்கொள்ளைக்காரரும் இந்தியர்களை அடிப்பதும், கொள்ளையடிப்பதும், விடுதிகளுக்குத் தீவைப்பதுமாயிருக்கின்றனராம். இந்தியர்களும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் ஆயிரக்கணக்கில் இந்தியா திரும்புகின்றனர் என்றும், கப்பல் கம்பெனியார் திரும்புகின்ற இந்தியர் வசதிக்கென வாரம் ஒன்றிற்கு இரண்டு மூன்று கப்பல் விடுகின்றனர் என்றும் தெரிகின்றது.

***

காரைக்குடிக்கு அருகாமையிலுள்ள முத்துப்பட்டணம் என்னுமிடத்தில், நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் ஒரு குருகுலம் ஸ்தாபித்திருக்கின்றார். அதற்கென கட்டடவேலை விரைவாக நடந்து வருகின்றது. இக்குருகுலத்துடன் சிராவயிலில் சில வாண்டுகளாக நடந்துவரும் காந்தி ஆசிரமம் என்ற வாசகசாலையும் இணைக்கப்பட்டுள்ளது. இக்குருகுலம் இனிச் சுப்பிரமணிய செட்டியார் குருகுலமென்று அழைக்கப்பெறும்.

***

பஞ்சாப் அமிர்தசரஸில் ஒரு எளியவன் தனது எருமைமாட்டை விற்று அதன் விலையாக வந்த ரூ. 100 வீட்டில் வைத்துவிட்டு வெளியே போனான் என்றும், அந்த நோட்டை அவனது நான்கு வயதுக் குழந்தை எடுத்துக் கிழித்து அடுப்பிலே போட்டுவிட்டதென்றும், தந்தை திரும்பியவுடன் இந்நிகழ்ச்சி தெரியவர, குழந்தையைக் கொன்றனன் என்றும் தெரிகின்றது.

***

17உ ஞாயிறு பிற்பகல் 2½ மணிக்கு லேடி. வில்லிங்டன், ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியை ஸிம்லாவிற்கு வரும்படி அழைத்திருந்தார். ஸ்ரீமதி அநுசூயா பென்னுடன் ஸ்ரீமதி கஸதூரிபாய் சென்று லேடி. வில்லிங்டன் மரியாதையாக வரவேற்க இருவரும் பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தார்கள். மகாத்மாவின் ஆகாரமென்ன? அவர் போதிய அளவு சாதமும் மரக்கறிகளும் சாப்பிடுகின்றாரா, என்று லேடி வில்லிங்டன் விசாரித்தார். அவர் ஈச்சம் பழமும் பாலுந்தான் சாப்பிடுகின்றாரென்று ஸ்ரீமதி காந்தி சொன்னதும், அவர் அதிக வேலை செய்யவேண்டி யிருப்பதாலும் அவருடைய உயிர் அருமையானதாக இருப்பதாலும் அ[illegible] அவருக்கு நிர்ப்பந்தித்துக் கொ[illegible] லேடி வில்லிங்டன் சொன்னார்.

ஸ்ரீமதி கஸ்தூரி பாய் காந்தியும் அநுசூயா பென்னும் உடுத்தி யிருந்த கதர்ப் புடவையை லேடி வெல்லிங்டன் ஸிலாகித்துநல்ல நயமானதாகவும் தாம்விரும்பும் வர்ணத்திலும் கதர் கிடைத்தால் கட்டிக்கொள்ளுவதாகச் சொன்னார். லேசான ரோஜா நிறக் கதரைத் தமக்கு அனுப்பும்படி லேடி வில்லிங்டன் கேட்டுக்கொண்டார். கவர்ன்மெண்டு பிரதிவருஷமும் மலையுச்சிக்குச் செல்லுவதைத் தாம் விரும்பவில்லை யென்றும் மகாத்மா அபிப்பிராயப்படுவதுபோல் ஜனங்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதற்காகக் கவர்ன்மெண்டு கீழேயே இருக்கவேண்டுமென்றும் லேடி வில்லிங்டன் சொன்னார்.

***

1930-ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் 1931ம் ஆண்டு பங்குனி மாதம் வரைக்கும் முடிய வுள்ள இலங்கை அரசாட்சியாரின் ஆறுமாத வருமானக் கணக்கு வெளியாகி யிருக்கின்றது. பண நிர்வாக சபையார் இந்த 6 மாத காலத்துக்கும் ஏறக்குறைய 5,45,10.000 ரூபாய் வருமானம் வரக்கூடுமெனத் தொடக்கத்தில் மதிப்பிட்டனர். பின் வியாபாரம் குறைந்தபடியால் 4,80,00,000 ரூபாய் வருமானம் வரக்கூடுமென மதிப்பிட்டனர். ஆனால் அரசினரின் கணக்கின்படி ஏறக்குறைய 4,65,00,000. ரூபாய் வருமானம் வந்திருக்கின்றது. புதிய சட்டசபை ஏற்பட்ட பின் அடுத்த வருஷத்துக்கு வரவு செலவு மதிப்பிடும்பொழுது செலவுக்குத்தக்கபடி வருமானத்தை மதிப்பிடுவதில் ஏறக்குறைய 9,0000,000 ரூபாய்க்கு 9,50,00,000 ரூபாய்க்கு மிடையில் மதிப்பிட வேண்டுமாம்.

***

புதிய ஜனநாயகம் என்னும் விஷயமாய் மிஸ்டர் ஜி. எ. ஸ். அருண்டேல் செய்த பிரசங்க மொன்றில் அவர் கூறியதாவது:—

தேசாபிமானம் சுதந்திரம்என்று சாதாரணப்பொது மக்கள் ஆரவாரம் செய்வதால் நல்லறிவாளர் சிலர் முன்வந்து விஷய ஆராய்ச்சிசெய்ய முடியாதுபோகின்றதுமல்லாமல், நாட்டிற்கு நலனும் ஏற்படுவதில்லை! நாட்டின் நலத்திற்கு அறிவாளர் சிலரே வேண்டும். ஒவ்வொரு நாட்டிலுள்ள நல்லறிவாளர்களுடைய அறிவாட்சியே, ஒவ்வொரு மனிதனுடைய நன்மைக்கும் பொதுமக்களுடைய நன்மைக்கும் அமைதிக்கும் வித்தாக அமையும். நாட்டு அரசியலின் தலைமையில் சிறுபான்மையான அறிஞர்கள் ஆட்சி அமையவேண்டும். நல்லவர்களும் அறிவாளரும் இல்லா எந்த ஆட்சிமுறையும் எப்பயனும் யாருக்கும் நல்காது, தன்னலம் விரும்பும் சிலருக்குத் தொழிலாய் அமைவதல்லால் இந்த ஆட்சிமுறைகளில் வேறு என்ன காணக்கிடைக்கும்

***

ஆதங்க நிக்ரஹ வைத்தியசாலைத்தங்கவிழா:-ஆதங்க நிக்ரஹவைத்தியசாலைத், தங்கவிழா அறிக்கைஒன்றை அக்கம்பனியார் நமது பார்வைக்கு அனுப்பிவித்தனர். விழா நவநகர்மன்னர் தலைமையில் மே மாதம் 21-ந்தேதி நடந்தேரியது. இந்த வயித்தியசாலையின் தலைவர் வயித்திய சாஸ்திரி மணி சங்கர் கோவிந்தஜி என்பர் இந்த 50 வருடகாலமாக, தமது வயித்திய சாலையை ஜனங்களுக்குத் திருப்திக்குறைவிலாதபடி நடத்திவரும் முறையைப்பற்றிப் பலர் இவ்விழாவில் [illegible] இவ்விழாவை ஒட்டிக் குழந்தைக் [illegible] விளையாட்டுகளும் நடைபெற்றன. பிறகு பரி[illegible] வழங்க விழா நிறைவுற்றது.

188919

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,
ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

டிப்போ, பம்பாய்
கல்கத்தா



இரண்டு ஸம்ஸ்க்ருத
மஹாகாவியங்களின்
தமிழ் மொழி பெயர்ப்பு.
ஆயுர்வேத பூஷண பண்டித
எம். துரைசாமி ஐயங்கார் அவர்களால்
மொழி பெயர்க்கப் பட்டவை.

காதம்பரீ
சீர்திருத்திய பதிப்பு

1400 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத காதம்பரீயின் மொழி பெயர்ப்பு. கதை வெகு அற்புதமானது பண்டைக்காலத்திய இந்திய நாகரீகத்தை விளக்கும் வர்ணனைகள், வாக்கிய நடை தமிழில் இனிதாகவும் எளிதாகவும் அமையப்பெற்றது. "காதம் பரீயைப் படிக்கையில் இரஸிகர் உணவும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. அநேக படித்த வித்வான்களும் ஸ்த்ரீகளும் இக்காதம்பரீயைப் புகழ்ந்து வருகிறார்கள். விலை ரூ. 1—8—0

மேக ஸந்தேசம்.

ஸ்ரீ காளிதாஸ மஹாகவி இயற்றிய ஸம்ஸ்கிருத காவ்யத்தின் அழகிய தமிழ் மொழி பெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாப வசத்தால் மனைவியை விட்டுப் பிரிந்த ஒரு யக்ஷன் தன் மனைவிக்குத் தூது அனுப்பும் விஷயம் வெகு மனோஹரமாய் அமைந்துள்ளது. தமிழ் நடை வெகு இனிது. ஒவ்வொரு பக்கத்தில் அரும்பத உரையும் உபகதைகள் முதலியதைப் பற்றிய அநுபந்தம், முகவுரை முதலியன வெகு உபயோகமாயிருக்கும்.
தற்கால விலை ரூ. 0—14—0

இரண்டு நூல்களும் ஒரே தடவையில் விலை ரூ 2.
தபால் சார்ஜ் முதலியது வேறு.

வைத்திய கலாநிதி ஆபீஸ்.
85. வெள்ளாழத்தெரு, வேப்பேரி, மதராஸ்

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாயக்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதர் கதை. விலை ரூ. 1.0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)